வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 04 28.04.2023 வெள்ளிக்கிழமை இதழ் : 139 பக்கங்கள் : 16

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria றியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# வெடுக்குநாறி மலையில் விக்கிரகங்கள் இன்று பிரதிஷ்டை

## நீதிமன்ற அனுமதியை அடுத்து

வவுனியா, ஏப்ரல் 28

**வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளன. வவுனியா மாவட்ட நீதிமன்றம் வழங்கிய அனுமதியை அடுத்தே இந்த நிகழ்வு முன்னெடுக்கப்படுகிறது.**

விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்வதற்கான பூசைகள் இன்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகும் என்று ஆலய நிர்வாகத்தை சேர்ந்த பூபாலசிங்கம் 'ஈழநாடு' நாளிதழுக்கு தெரிவித்தார்.

அத்துடன், உடைக்கப்பட்ட விக்கிரகங்களுக்கு பதிலாக சிவலிங்கம், பிள்ளையார், முருகன், அம்மன், வைரவர் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளன என்றும் தொடர்ச்சியாக பூசை வழிபாடுகளை மேற்கொள்ளவும் நட வடிக்கை எடுக்கப்படுகிறது எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, ஆலயத்தில் விக்கிரகங்களை உடைத்தவர்கள் யார் என்பதைக் கண்டறிந்து அவர்களை கைது செய்ய வேண்டும் என்று பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வவுனியா - நெடுங்கேணி வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயம் தொடர்பான வழக்கு நேற்று வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

முன்னதாக, கடந்த திங்கட்கிழமை இந்த வழக்கு 15

# அமெரிக்காவுக்குள் நுழைய கரன்னகொடவுக்கு தடை!



கொழும்பு, ஏப். 28

இலங்கை கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் ஒப் த பிலீட் வசந்த கரன்ன கொட மற்றும் அவரது மனைவி ஆகியோர் அமெரிக்காவுக்குள் பிரவேசிப்பதற்கு தகுதியற்றவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விரிவான செய்தி 14ஆம் பக்கத்தில்



# தையிட்டி விகாரைக்கும் கலசம் வைக்கப்பட்டது?

யாழ்ப்பாணம், ஏப். 28

தையிட்டியில் இராணுவத்தினரால் அடாத்தாக தனியார் காணியில் அமைக்கப்பட்ட விகாரைக்கு நேற்று கலசம் வைக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

நேற்றைய தினம் இந்தப் பகுதியில் அதிகளவான 15

# இந்திய தளபதி இலங்கை வருகின்றார்!

கொழும்பு, ஏப். 28

இந்தியாவின் விமானப் படை தளபதி எயார் சீவ் மார்ஷல் விவேக் ராம் சௌத்ரி உள்ளிட்ட நால்வர் குழு எதிர்வரும் மே முதலாம் திகதி இலங்கை வருகின்றது.

விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரணவின் அழைப்பின் பேரிலேயே அவர் இலங்கை வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது. 15

# 19 பவுண் களவு; ஒருவர் கைது!

யாழ்ப்பாணம்,ஏப். 28

பட்டப்பகலில் வீடுடைத்து 19 பவுண் நகைகளைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மல்லாகத்தில் இடம்பெற்ற இந்தத் திருட்டு சம்பவத்தில் சந்தேகநபரிடமிருந்து நகைகளையும் தெல்லிப்பழை பொலிஸார் 15

# நெடுந்தீவை உலுக்கிய ஐவர் கொலை; படுகாயமடைந்த மூதாட்டியும் மரணம்!

யாழ்ப்பாணம், ஏப். 28

நெடுந்தீவில் நகைகளை களவாடிய பின்னர் ஐவர் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவத்தில் படுகாயமடைந்த ஆறாவது மூதாட்டியும் நேற்று உயிரிழந்தார்.

100 வயதான பூரணம் என்பவரே நேற்று மாலை உயிரிழந்தார். இந்தத் தகவலை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை நிர்வாகம் உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த சனிக்கிழமை அதிகாலை ஒரே வீட்டில் வசித்த ஆறு முதியவர்கள் மீது கொடூர தாக்குதல் நடத்தப்பட்டது. கத்தியால் வெட்டப்பட்டு நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 3 மூதாட்டிகளும் 2 முதியவர்களுமாக ஐவர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டார்.

இவ்வாறு மீட்கப்பட்ட 100 வயது மூதாட்டியான பூரணம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் 15

# ஊழல் விசாரணை குழுவுக்கு முழுமையான அதிகாரங்கள்!

கொழும்பு, ஏப். 28

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தில் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு வெளிநாடுகள் மற்றும் ஏனைய வெளிநாட்டு தரப்பினருடன் இணைந்து விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சட்டமூலத்தின் பிரகாரம், இலங்கை மற்றும் ஏனைய வெளிநாடுகளுக்கான உடன்படிக்கைகள் அல்லது ஏற்பாடுகளின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவுக்கு மேற்கூறியவாறு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒரு வெளிநாட்டு நிறுவனத்துடன் அல்லது 15

# இனப்பிரச்னைக்கான தீர்வே பொருளாதார மீட்சிக்கு வழி!


## கஜேந்திரகுமார் எம். பி. எடுத்துரைப்பு

கொழும்பு, ஏப். 28

நாடு என்ற ரீதியில் பொருளாதார பாதிப்புக்கு நிலையான தீர்வு காணவேண்டுமாயின் இனப்பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பால் மாத்திரம் முன்னேற்றமடைய முடியாது. ஆகவே, கட்சி என்ற ரீதியில் சர்வதேச நாணய நிதியத்துடனான செயல்பாடுகளுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்துவோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மீதான பாராளுமன்ற விவாதத்தில் நேற்று பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் 15



## குருந்தூர்மலை விகாரை விவகாரம்:

# நீதிவான் நேரில் சென்று பார்வையிட தீர்மானம்!

முல்லைத்தீவு, ஏப். 28

முல்லைத்தீவு - குருந்தூர்மலையில் நீதிமன்றின் கட் டளையை மீறி விகாரை அமைக்கும் பணிகள் தொடர்ச் சியாக இடம்பெற்று வருகின்றனவா என்பதை அவதானிக்க நீதிவான் நேரில் அங்கு செல்லவுள்ளார் என்று அறிவித்துள்ளார்.

தண்ணிமுறிப்பு - குருந்தூர்மலையில் ஆதிசிவன் 15

# நாட்டை அழித்தவர்களுடன் நாம் இணையவே மாட்டோம்!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஏப். 28

நாட்டை அழித்த ராஜபக்ஷ குழுக்களுடனும் அந்த அரசாங்கத்துக்கு துணை போகக்கூடியவர்களுடனும் ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் இணையாது. மாறாக, மக்களின் ஆணையுடன் நாட்டின் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வோம். அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் அமைக்கப்பட்டதும் கடந்த காலங்களில் மோசடியான செயல்பாடுகளால் நாடு இழந்த சொத்துகள், வளங்கள் மற்றும் நிதிகளை மீளப் பெற நடவடிக்கை எடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றியபோத அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் செல்வந்தர்களுக்கு 600 - 700 பில்லியன் ரூபாய் 15

## இப்படியும் நடக்கிறது…!

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்தக்கோரி ஐந்து தமிழ்க் கட்சிகள் கூட்டாக இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதியமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

நிச்சயமாக நினைவிருக்கும் என்று நம்புகிறேன். அந்த ஒப்பந்தத்தின் பலனாக உருவான பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தவும் மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு அழுத்தம் கொடுக்குமாறும் இந்தியப் பிரதமரைக் கோருவதற்காக ரெலோ முன்னின்று ஒரு கூட்டத்தை நடத்தியது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அந்தக் கூட்டத் தில் மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் ஆகியோரும் கலந்து கொண்டு தமது ஆதரவை வழங்கினார்கள். ஆனால், அப்போது கூட்டமைப்பின் தலைவராக இருந்த சம்பந்தனோ, பதின்மூன்று எப்போதோ முடிந்துபோன ஒன்று அதற்காகக் கடிதம் எழுத முடியாது என்று பதின்மூன்றுக்கு பதிலாக, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்த அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கடிதம் மாற்றியமைக்கப்பட்டதும் அதனால் மனோ, ஹக்கீம் ஆகியோர் அதிலிருந்து விலகியமையும் அப்போது பரபரப்பாகப் பேசப்பட்ட விடயங்கள்.

அப்போது கூட்டமைப்பில் தமிழரசு கட்சியும் இருந்தது. சம்பந்தனே அப்போது கூட்டமைப்பின் தலைவராக இருந்ததால் அவரின் விருப்பத்தைமீறி யாரும் செயல்பட விரும்பியிருக்கவில்லை.

கடைசியில் சம்பந்தனின் கையெழுத்துடன் கடிதம் இந்தியப் பிரதமருக்கு அனுப்புவதற்காக இந்தியத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டது. அந்தக் கடிதத்தை கையளிப்பதற்காக அப்போது கூட்டமைப்பிலிருந்த தமிழரசு, ரெலோ, புளொட் ஆகிய கட்சிகளின் தலைவர்களும், விக்னேஸ்வரன், ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோரும் சென்றிருந்தனர். தூதரகத்திலிருந்து வெளியே வந்தபோது விக்னேஸ்வரன் எம். பியிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி கேட்டபோது அவர் சொன்னது இப்போதும் ஞாபகத்தில் இருக்கின்றது.

'இப்போது எமக்கு முக்கிய பிரச்னையாக இருப்பது காணி அபகரிப்பு விவகாரம் தான். இந்த மாகாண சபைகளுக்கு தேர்தல் நடைபெற்று அங்கு மக்கள் ஆட்சி நடைபெற்றால் இந்த காணி அபகரிப்புக்களை தடுத்து நிறுத்தலாம். அதற்காகவாவது நாங்கள் இந்த பதின்மூன்றை இப்போது இழந்துவிடக் கூடாது' என்றார்.

மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மையுடன் வடக்கு மாகாண சபையின் முதல்வர் கதிரையில் அமர்ந்திருந்தபோது, கால்கள் முறிந்துபோன கதிரையில் என்னைக் கொண்டுவந்து இருத்தியிருக்கிறார்கள் என்று சொன்னவர் இந்த விக்னேஸ்வரன். ஆனால் அவரே, காணி பறிபோவதைத் தடுக்க வேண்டும் என்றால் இந்த மாகாண சபைகளையாவது இயங்கச் செய்யவேண்டும் என்றார்.

ஆக, தற்போதைய மாகாண சபைகள் எந்த அதிகாரமும் அற்றவை என்று நாம் கூறிக்கொண்டாலும் காணிகள் பறிபோவதைத் தடுக்கும் அதிகாரம் உள்ளவை என்பதை விக்னேஸ்வரன் அன்று எமக்கு புலப்படுத்தியிருந்தார்.

அந்த மாகாண சபைகளுக்கு ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக தேர்தல்கள் நடைபெறவில்லை. தேர்தல் நடைபெறவேண்டும் என்றால், பழைய தேர்தல் முறையில் தேர்தலை நடத்த பாராளுமன்றத்தில் அனுமதி பெற வேண்டும். அதற்காக பாராளுமன்றத்தில் திருத்தச் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவந்து சாதாரண பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்றினால் போதுமானது.

கடந்த செவ்வாயன்று பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையாக அது தொடர்பான திருத்தச் சட்டமூலம் ஒன்றை தமிழரசு எம். பி. சுமந்திரன் தாக்கல் செய்திருக்கிறார். அதனை மனோ கணேசன் வழிமொழிந்திருக்கிறார்.

இனி அந்த சட்டமூலம் மீதான விவாதம் நடைபெற்று அது பாராளுமன்றில் நிறைவேற்றப்பட வேண்டும். இன்று பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு சிங்கள கடும்கோட்பாளர்கள் மத்தியில் எதிர்ப்பு இருந்தாலும் இருக்கின்ற மாகாண சபைகளின் அதிகாரத்துடன் அவற்றை இயங்கச் செய்வதற்கு பெருமளவில் எதிர்ப்பு இருக்காது என்றே நம்பலாம்.

எனவே, பாராளுமன்றில் இருக்கும் அனைத்து கட்சிகளையும் அணுகி, அந்தத் திருத்த சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியை அனைத்து தமிழர் தரப்புகளும் இணைந்து செய்யவேண்டும். மனோ கணேசன் போன்றவர்கள் இந்த முயற் சியை கையில் எடுக்கவேண்டும்.

மாகாண சபைகளுக்கான தேர்தலுக்கான வழியை திறந்துவிடவேண்டும்.!

- ஊர்க்குருவி

# செய்யும் பாவத்தில் எதிர்க்கட்சிகளையும் இணைப்பதற்கே அரசாங்கம் முயற்சி!

### சரத் பொன்சேகா எம். பி. சாடல்

கொழும்பு, ஏப். 28

"செய்யும் பாவத்தில் எதிர்க்கட்சிகளையும் இணைத்துக்கொள்வதற்கே அரசாங்கம் முயற்சிக்கின்றது" என்று பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேக்கா தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

"சர்வதேச நாணய நிதியத்தின் விடயத்தில் அரசாங்கம் மேற்கொள்ளும் பாவச் செயல்பாடுகளில் எதிர்க்கட்சிகளையும் உள்வாங்குவதற்கே சர்வதேச நாணய நிதியம் தொடர்பிலான விடயத்தை பாராளுமன்றத்துக்கு கொண்டுவந்துள்ளது.

இதனை நாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி என்பது மற்றுமொரு பெரும் கடனே. இது கடன் சுமையில் இருந்துக் கொண்டே பெற்றுக்கொள்ளும் மற்றுமொரு கடனாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவிவை பெற்றுக் கொண்டால் இலங்கைக்கு சர்வதேச ரீதியிலான அங்கிகாரம் கிடைக்கும் என்பதே அரசாங்கத்தின் வாதமாகக் காணப்படுகின்றது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் மேலும் 7 பில்லியன் டொலர் கடனை பெற்றுக் கொள்ள முடியும் என்று அரசாங்கம் கூறுகின்றது. வீடுகளிலிருந்த சகலவற்றையும் விற்பனை செய்துவிட்டு இருக்கும் நபருக்கு இறுதியில் வங்கிக் கடன் கிடைத்ததைப் போன்றதே சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியாகும். இதுவே யதார்த்தமாகும்.

நாட்டு மக்கள் யதார்த்த நிலைமையை புரிந்துகொள்ள வேண்டும். நாடு எந்த இடத்தில் வீழ்ந்திருக்கின்றது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். நாடு வீழ்ச்சியடைந்திருக்கும்போது அதனை மீளக்கட்டியெழுப்புவதற்கு மாற்றுவழிகள் இல்லை என்றால் கடனை பெறுவது தொடர்பில் எமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. நாட்டை கடன்சுமையிலிருந்து மீட்டெடுப்பதற்கான எவ்விதத் திட்டங்களும் அரசாங்கத்திடம் இல்லை" - என்றார்.

(ஐ- கே)

### கப்பல்களால் கடலுக்கு பாதிப்பு:

# சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு வழக்கு தாக்கல் செய்வதில் சிக்கல்!

கொழும்பு, ஏப். 28

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல், நியூ, டயமண்ட் கப்பல்கள் தொடர்பில் கடலுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பிலான வழக்குகளை தாக்கல் செய்யும் விடயத்தில் சட்ட மா அதிபர் திணைக்களம் பெரும் அசௌகரியங்களுக்கு உட்படுத்தப்பட்டது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,

"நாட்டு மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்துவதற்கும் உண்மையை கதைப்பதற்கும் நாம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை. இரு கப்பல்களிலிருந்தும் நட்டஈட்டை பெற்றுக்கொள்ள வேண்டியதாக உள்ளது.

ஒன்று எக்ஸ்பிரஸ்பேர்ள் கப்பலால் ஏற்பட்ட சேதம். அடுத்ததாக நியூ டயமண்ட் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு.



நிவ்டயமண்ட் கப்பலால் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நட்டஈட்டை பெற்றுக்கொள்வதற்கு தாமதம் காணப்பட்டது. அந்த தாமதம் காரணமாக முன்னாள் நீதியமைச்சர் அலி சப்ரியும் நானும் தலையிட்டோம்.

சட்டமா அதிபர் திணைக் களத்துக்கு இவ்வாறு வழக்கு தாக்கல் செய்யுங்கள் என்று நாம் ஆலோசனை வழங்குவதில்லை. அழுத்தம் கொடுப்பதும் இல்லை.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விடயத்தில், சட்டமா அதிபர் திணைக்களத்தில் சமுத்திரம் தொடர்பிலான போதிய அறிவுகொண்ட சிறந்த சட்டத்தரணிகள் இருக்கின்றனர். அவ்வாறான குழு ஒன்றையே நாம் நியமித்துள்ளோம். அவர்கள் 1000 பக்கங்கள்அறிக்கையை ஆராய்ந்து வழக்கு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல், நியூ டயமண்ட் கப்பல்கள் தொடர்பில் கடல் பிராந்தியங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பிலான வழக்குகளை தாக்கல் செய்யும் விடயத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் பெரும் அசௌகரியங்களுக்கு உட்படுத்தப்பட்டது. இந்த கப்பல் நிறுவனங்கள் உள்ளிட்டவற்றிடமிருந்து சில சலுகைகள், இலஞ்சங்களை பெற்றவர்களே அவ்வாறு செய்தனர்" என்றார்.

(கே)

# கடந்த 4 மாதங்களில் மட்டும் 143 யானைகள், 36 பேர் மரணம்!

கொழும்பு, ஏப். 28

நடப்பு ஆண்டில் கடந்த 4 மாதங்களில் 143 காட்டு யானைகள் உயிரிழந்தன. இதேநேரம், யானைகளின் தாக்குதலில் 36 பேர் உயிரிழந்தனர் என்று தரவுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

மேலும், நடப்பு ஆண்டில் மட்டும் காட்டு யானைகளின் மரணம் அதிகரித்துள்ளது. பல்வேறு காரணங்களால் 143 காட்டு யானைகள் உயிரிழந்தன என்று வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

யானைகளின் மரணங்கள் 37 மரணங்கள் துப்பாக்கிச் சூடு காரணமாகவும், 27 மரணங்கள் மின்சாரம் தாக்கியதாலும், 6 மரணங்கள் உணவு விஷமாகியமை உள்ளிட்ட காரணங்களாலும் பதிவாகியுள்ளன.

இதேவேளை, காட்டு யானைகளின் தாக்குதலால் இந்த வருடத்தின் கடந்த நான்கு மாதங்களில் 36 பேர் உயிரிழந்தனர். கிழக்கு வனவிலங்கு பிராந்தியத்தில் மாத்திரம் 13 மரணங்கள் பதிவாகியுள்ளன என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மாணிக்க கங்கையில் முதலைகள் நடமாட்டம்

கொழும்பு, ஏப். 28

கதிர்காமம் மாணிக்க கங்கையில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்து வருவதால் அங்கு நீராடச் செல்லும் பக்தர்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர் என்று பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கதிர்காமம் இலக்கம் 2 பாலத்துக்கு அருகில் இந்த முதலைகள் கடித்து இரண்டு மாதங்களில் நால்வர் காயங்களுக்கு உள்ளாகினர்.

இது தவிர கடந்த நவம்பர் மாதம் செல்லக் கதிர்காமத்தில் பெண் ஒருவர் முதலைக்கு பலியானார்.

தற்போது கதிர்காமம் இலக்கம் 01, 02, 03 ஆகிய பாலங்களுக்கு அருகில் சுமார் 7 அடி நீளம் கொண்ட முதலைகள் நடமாடுகின்றன என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஈழநாடு
Eelanadu
28.04.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அடுத்து என்ன செய்வது?

ஒருநாள் ஹர்த்தால் முடிந்து விட்டது - அடுத்தது என்ன? 2009இற்கு பின்னரான - கடந்த 14 வருடங்களாக இவ்வாறான கேள்வியுடன்தான் நாம் பல்வேறு ஹர்த்தால்களை - பேரணிகளை கடந்து சென்றிருக்கின்றோம். ஒருநாள் ஹர்த்தாலை இரண்டு நாட்கள் - மூன்று நாட்களென்று கூறினால் அரசியல்வாதிகளுக்கு எதிராக மக்கள் திரும்பிவிடுவர். எதிர்காலத்தில் ஒருநாள் ஹர்த்தால்கள்கூட முழுமையாக வெற்றியளிக்குமா என்பது கேள்விக்குறிதான்.

ஏனெனில், வடக்குக்கும் கிழக்குக்கும் இடையிலான அரசியல் சமன்பாடுகள் மாறிக்கொண்டு செல்கின்றன. ஏனெனில், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு தவிர்ந்த ஏனைய இரண்டு மாவட்டங்களிலும் இவ்வாறான ஹர்த்தால்கள் வெற்றியளிக்க வேண்டுமென்றால் ஏனைய சமூகங்களின் ஆதரவு அவசியம். குறிப்பாக, முஸ்லிம்களின் ஆதரவு தேவை. இம்முறை, அம்பாறையில் தமிழ் மக்களே இதற்கு பெரியளவில் ஆதரவு வழங்கவில்லை. மக்களின் பிரச்னைகள் மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபடுகின்றன. இந்தப் பிரச்னைகளை அரசியல்வாதிகளால் சரியாகக் கையாள முடியாவிட்டால் எதிர்காலத்தில் தாயகம் தழுவிய செயல்பாடென்பது வெறும் உதட்டளவு விடயமாகவே மாறிவிடும்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற ஹர்த்தால்கள், எழுக தமிழ், பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை, பல்கலைக்கழக மாணவர்களின் பேரணி - அனைத்தினதும் விளைவு என்னவென்று கேட்டால் எதுவுமில்லை. ஏனெனில், அதற்கு பின்னர்தான் பௌத்த மயமாக்கல் தீவிரமடைந்திருக்கின்றது - குறிப்பாக, இந்து ஆலயங்களின் இருப்பிடங்களை நோக்கி தொல்பொருள் திணைக்களம் திரும்பியிருக்கின்றது. அவ்வாறாயின் இவ்வாறான செயல்பாடுகளை கண்டு அவர்கள் அஞ்சப் போவதில்லை என்பது தெரிகின்றது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் மாற்று வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். அது என்ன மாற்று வழியென்று சிந்தித்தாலும் பதிலை தேடுவது முயலில் கொம்பை தேடுவதாக முடிந்துவிடும்.

இந்தப் பின்புலத்தில் எம். ஏ. சுமந்திரன் சட்ட மறுப்பு போராட்டம் தொடர்பில் பேசியிருக்கின்றார். தற்போது, தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளின் முன்னால் எஞ்சியிருக்கும் ஒரேயொரு விடயம் அது மட்டும்தான். சுமந்திரன் கூறுவதை ஏனைய கட்சிகள் எந்தளவுக்கு செவிசாய்க்கும் என்பதிலும் தெளிவில்லை. எனினும், அனைவருமாக இணைந்து சட்டமறுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவார்களாக இருந்தால் அது ஒரு செய்தியை வெளிப்படுத்தும். ஜனநாயகத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையாளக்கூடிய உச்சமான விடயம் சட்டமறுப்பு மட்டும்தான். அதற்கும் கொழும்பு இறங்கிவராவிட்டால் என்ன செய்வது?

இங்கு கேள்வி, இவ்வாறான செயல்பாடுகளை முன்னெடுக்கும் அதேவேளை, இந்திய மற்றும் மேற்குலக நாடுகளை நோக்கிய செயல்பாடுகளையும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக முன்னெடுக்க வேண்டும். இது தொடர்பில், முன்னரும் ஈழநாடு சுட்டிக்காட்டியிருக்கின்றது. அதாவது, கொழும்புக்கு வெளியில் யாழ்ப்பாணத்திலோ அல்லது திருகோணமலையிலோ முக்கிய நாடுகளின் இராஜதந்திரிகளை அழைத்து தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் பிரத்தியேகமாக விவாதிக்கும் செயல்பாடுகளை நோக்கி தமிழ்க் கட்சிகள் நகர வேண்டும். இதுவும் இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் ஒரு தரப்பாக இருக்கின்றனர் - ஒரு தரப்பாக சிந்திக்கின்றனர் என்பதை வெளிக்கொணரும் அதேவேளை அரசாங்கத்துக்கு இராஜதந்திர நெருக்கடியையும் ஏற்படுத்தும். உண்மையில், நூறு ஹர்த்தால்களை செய்வதை விடவும் இவ்வாறான ஒரு நடவடிக்கை அதிக தாக்கத்தை ஏற்படுத்தும். சுமந்திரன் போன்றவர்கள் இதற்கு முயற்சிக்க வேண்டும். முயற்சித்தால் இது இயலாத காரியம் அல்ல.

# வற்றாறப்பளை கண்ணகி பொங்கல்; முன்னாயத்தக் கூட்டம் நடைபெற்றது

*முல்லைத்தீவு, ஏப். 28*

வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங் கல் உற்சவம் எதிர்வரும் மே 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதையொட்டிய முன்னாயத்தக் கூட்டம் நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் முன்னாயத்த ஏற்பாடுகள் தொடர்பில் ஆலய பரிபாலன சபையினர் மற்றும் ஆலய உற்சத்துக்கு வருடாவருடம் உதவிடும் ஏனைய திணைக் களங்களுக்கிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் (நிர்வாகம் ), மாவட்ட பிரதம கணக்காளர் ம. செல்வரட்ணம், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி ம. உமாமகள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மாவட்ட பொறியியலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் அதிகாரி, மின்சார சபை பொறியியலாளர், நீர் வழங்கல் அதிகாரிகள், கரைதுறைப்பற்று பிரதேசசபை உத்தியோகத்தர்கள், இலங்கை போக்குவரத்து சபை அதிகாரிகள், சுகாதார பரிசோதகர்கள், இலங்கை செஞ்சிலுவை சங்க உறுப்பினர், முல்லைத்தீவு மாவட்ட பொஸிஸ் பொறுப்பதிகாரி, முல்லைத்தீவு மாவட்ட இராணுவ பொறுப்பதிகாரி, பொலிஸார், இராணுவத்தினர், ஆலய பரிபாலன சபையினர், கலாசார உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கல்ந்துரையாடலில், ஆலய திருவிழா காலத்தில், ஆலய வளாகத்தை சூழவுள்ள வீதிகள் புனரமைப்பு, ஆலய வளாக தூய்மைப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களோடு ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களுக்காக சுகாதாரம், குடிதண்ணீர், போக்குவரத்து வசதி மின்சாரம், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டன. (ஐ)

# வீணைமைந்தனின் நூல்கள் வெளியீடு!

*யாழ்ப்பாணம், ஏப். 28*

கனடிய எழுத்தாளர் வீணைமைந்தனின் மூன்று புதிய நூல்கள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக் கழக நூலக அரங்கில் வெளியிடப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற் குணராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

இதில், கனடிய பல்லின பத்திரிகையாளர் கழக சிரேஷ்ட உப தலைவர், ரொறன்ரோ மனித நேயக் குரல் அமைப்பின் தலைவர், கனடா "உதயன்" பிரதம ஆசிரியருமான ஆ. என். லோகேந்திரலிங்கம் சிறப்புரை ஆற்றவுள்ளார். (ஐ)

# மே தின பேரணியும் கூட்டமும்!

*யாழ்ப்பாணம், ஏப். 28*

எதிர்வரும் முதலாம் திகதி இடம்பெற இருக்கும் சர்வதேசத் தொழிலாளர்களின் போராட்டத் தினமான மே தினத்தை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி இம்முறை "ஆட்சியின் அடக்குமுறைகளை எதிர்க்கும் புரட்சிகர மே தினம்" எனும் தொனிப் பொருளின் கீழ் யாழ்ப்பாணம், மலையகம், வவுனியா ஆகிய பிரதேசங்களில் பேரணிகள் கூட்டங்களுடன் நடாத்தவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் மாலை 5 மணிக்கு மே தினக் கூட்டம் கா. செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும். பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு சந்தைக்கு அருகாமையில் இருந்து பி.ப. 4 மணிக்குப் பேரணி ஆரம்பமாகும்.

மலையகத்தில் இராகலை நகரில் கூட்டம் சிவ. இராஜேந்திரன் தலைமையில் பகல் 11 மணிக்கு நடைபெறும். பேரணி 10 மணிக்கு இராகலை நடுக்கணக்கு கடை வீதியில் இருந்து ஆரம்பித்து கூட்ட மைதானத்தை வந்தடையும்.

வவுனியாவில் கூட்டம் நகரசபை மண்டபத்தில் ம. பகீரதன் தலைமையில் நடைபெறும். பேரணி காலை 9 மணிக்கு வவுனியா மத்திய மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில் இருந்து ஆரம்பித்து நகர மண்டபத்தை வந்தடையும்.

இந்த மே தினப் பேரணிகள் கூட்டங்களில் கட்சியின் தலைமைக் குழுவைச் சேர்ந்தவர்களான சி. கா. செந்திவேல், வெ. மகேந்திரன், க. தணிகாசலம், சோ. தேவராஜா, எஸ். டொான் பொஸ்கோ, நி. பிரதீபன், டேவிட் சுரேன், த. சிறிப்பிரகாஸ், செம்மலர் மோகன், கே .ஜிந்தீசன், ச. பன்னீர்ச்செல்வம் உட்பட வெகுஜன-தொழில் சங்க அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்று உரையாற்றவுள்ளனர். (ஐ-2)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். கருத்து மோதல்கள் வரக்கூடும். வியாபாரம் தழைக்கும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**இடபம்**

துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**மிதுனம்**

[illegible]விக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**கடகம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பேச்சை தவிர்ப்பது நல்லது. வாடிக்கையாளர்களுக்கு படி சலுகைகளை அறிவிப்பீர்கள். ரகசியங்களை வெளியிட வேண்டாம். வளைந்து கொடுக்க வேண்டிய நாள்.

**சிம்மம்**

விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கன்னி**

நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். பழைய கடன் பிரச்னை கட்டுக்குள் வரும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். எண்ணங்கள் நிறைவேறும் நாள்.

**துலாம்**

உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். சாதித்துக் காட்டும் நாள்.

**விருட்சிகம்**

குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**தனுசு**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**மகரம்**

கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயமும் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**கும்பம்**

கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். திடீர் யோகம் கிட்டும்.

**மீனம்**

குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வேலையாட்களை மாற்றுவீர்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

# பழனிசாமி - அமித்ஷா புதுடில்லியில் சந்திப்பு!

சென்னை, ஏப். 28

அ. தி. மு. க. பொதுச்செயலாளர் பழனிசாமி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை டில்லியில் நேற்று சந்தித்தார்.

அ. தி. மு. க. பொதுச் செயலாளராகபதவி யேற்ற பின் முதல் முறையாக பழனிசாமி நேற்று டெல்லி சென்றார். இரவு 9 மணியளவில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்தார்.

அப்போது, தமிழகத்தின் எதிர்க்கட்சி தலைவர் என்ற முறையில், தமிழகத்தில் கடந்த 2 ஆண்டுகளில் நடைபெற்ற கொலை, கொள்ளை சம்பவங்கள், போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனை சம்பவங்கள், சட்டம்-ஒழுங்கு பிரச்னைகள் குறித்து அமித் ஷாவிடம் பழனிசாமி தெரிவித்தாரெனக் கூறப்படுகிறது.

தொடர்ந்து 2024 மக்களவை தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு உள்ள நிலையில் தமிழகத்தில் நிலவும் அரசியல் சூழல், தி. மு. கவின் கூட்டணி பலம், தமிழக பா. ஜ. க. - அ. தி. மு. க. இடையே சமீபத்தில் நிலவிய கருத்து வேறுபாடுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக தெரிகிறது.



மேலும், கர்நாடக தேர்தலில் தமிழர்களின் வாக்குகளை பெற்றுத் தந்து பா. ஜ. க. வேட்பாளரை வெற்றிபெறச் செய்யுமாறு பழனிசாமியிடம் அமித் ஷா கூறியதாகவும், பா. ஜ. க. வெற்றிக்கு உறுதுணையாக இருப்பதாக பழனிசாமி உறுதியளித்தார் என்றும் கூறப்படுகின்றது.

இந்த சந்திப்பின்போது, முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, பி.தங்கமணி, எம்.பி.க்கள் தம்பிதுரை, சி.வி.சண்முகம், என்.ராமச்சந்திரன் ஆகியோர் உடனிருந்தனர். (ஐ)

# அ. தி. மு.க. - பா. ஜ. க. கூட்டணி தொடர்கிறது

## எடப்பாடி பழனிசாமி

புதுடில்லி, ஏப். 28

அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணி தொடர்வதாக அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

அ. தி. மு. க. பொதுச் செயலாளராக பதவியேற்ற பின் முதன் முறையாக பழனிசாமி நேற்று முன்தினம் டில்லி சென்றார். இரவு 9 மணியளவில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்தார்.

இதனைத் தொடர்ந்து நேற்று காலை டெல்லியில் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, பேசிய அவர், “பாராளுமன்ற தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு காலம் உள்ளது. முந்தைய பாராளுமன்ற தேர்தலில் இருந்து தற்போது வரை அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணி தொடர்கிறது.

எங்களுக்கும், பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலைக்கும் எந்த தகராறும் கிடையாது. எல்லோரும் அவரவர் கட்சியை வளர்க்கத்தான் பார்ப்பார்கள். அ. தி. மு. க. கூட்டணியில் உள்ள கட்சிகள் எல்லாம் சுதந்திரமாக செயல்படும் கட்சிகள். தி. மு. கவில் உள்ளது போன்ற அடிமை கட்சிகள் இல்லை. அந்தந்த கட்சிகளுக்கு கொள்கை இருக்கிறது. கொள்கையின் அடிப்படையில் அவர்கள் செயல்பாடுவார்கள். கூட்டணி என்று வரும்போது ஒற்றுமையாக செயல்பட்டு கூட்டணி கட்சி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வோம் -என்றார்.

பன்னீர்செல்வம் மாநாடு தொடர்பான கேள்விக்கு, அவரைத்தான் கேட்க வேண்டும் என்று தெரிவித்தார். (ஐ)

# மோடியின் ‘மனதின் குரல்’ நிகழ்வை 100 இடங்களில் ஒளிபரப்ப திட்டம்!

மதுரை, ஏப். 28

பிரதமர் மோடியின் நூறாவது ‘மனதின் குரல்’ நிகழ்வை தமிழகத்தில் சட்டப்பேரவை தொகுதிக்கு நூறு இடங்கள் வீதம் ஒளிபரப்ப பா. ஜ. க. திட்டமிட்டுள்ளது.

பிரதமர் மோடி மாதத்தின் இறுதி ஞாயிற்றுக் கிழமைகளில் மனதின் குரல் நிகழ்ச்சி மூலம் பொது மக்களிடம் பேசி வருகிறார். இதில் பல்வேறு துறைகளை சேர்ந்தவர்கள், சமூக சேவகர்கள், விருது பெற்றவர்கள், சாதனையாளர்கள் குறித்து பிரதமர் பேசி வருகிறார். நூறாவது மனதின் குரல் நிகழ்வு நாளை மறுதினம் நடைபெறுகிறது.

பிரதமரின் நூறாவது மனதின் குரல் நிகழ்வை தமிழகம் முழுவதும் சட்டப்பேரவை தொகுதிக்கு நூறு இடங்கள் வீதம் ஒளிபரப்ப பா. ஜ. க. திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பில் அண்ணாமலை கூறுகையில், “உலகில் எந்த தலைவரும் பொதுமக்களுடன் வானொலியில் அதிகம் பேசியது இல்லை. 2ஆம் உலகப் போரின்போது அமெரிக்க ஜனாதிபதி 13 வாரங்கள் வானொலியில் பேசினார். 99 முறை பேசியவர் பிரதமர் மோடி மட்டுமே. இந்த 99 முறையும் தமிழ் மொழி, தமிழக சாதனையாளர்களை பிரதமர் கௌரவப்படுத்தியுள்ளார். நூறாவது மனதின் குரல் நிகழ்வை தமிழகத்தில் 234 சட்டப்பேரவைத் தொகுதிகளில் தொகுதிக்கு நூறு இடங்களில் ஒளிபரப்பு செய்ய வேண்டும்.

இந்தியாவில் தமிழகத்தில்தான் அதிகளவில் மனதின் குரல் ஒளிபரப்பு செய்யப்பட வேண்டும். அதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் மாவட்ட தலைவர்கள் மேற்கொள்ள வேண்டும். இந்த முறை அணிப் பிரிவு நிர்வாகிகளும் மனதில் குரல் நிகழ்வை ஒளிபரப்ப கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளனர்” - என்றார். (ஐ)

# அ. தி. மு. க. பொதுச் செயலாளர் விவகாரத்தில் சசிகலா வழக்கு!

சென்னை, ஏப். 28

அ. தி. மு. க. பொதுச்செயலாளர் விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தில் சசிகலா முன்னெச்சரிக்கை மனு தாக்கல் செய்துள்ளார்.

அ. தி. மு. க. பொதுச்செயலாளராக தேர்வான சசிகலா 2017இல் நடந்த பொதுக்குழு கூட்டத்தில் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். இதை எதிர்த்து சசிகலா தொடர்ந்த மனுவை சென்னை சிவில் நீதிமன்றம் தள்ளுபடி செய்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆட்சி மாற்ற சதி முயற்சிக்கு சவேந்திர சில்வாவும் துணை

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 28

**2022 ஆம் ஆண்டு 'அறகலய' அரசாங்க எதிர்ப்புப் போராட்டத்தைப் பயன்படுத்தி இலங்கையில் இடைக்கால நிர்வாகத்தை உருவாக்கும் சதித்திட்டத்துக்கு ஆதரவளித்ததாக முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மீது குற்றம் சுமத்தியுள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ.**

'அறகலய' அரச எதிர்ப்புப் போராட்டத்தைப் பயன்படுத்தி சபாநாயகர் தலைமையில் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதே சதி என நிகழ்வொன்றில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சில நபர்களை வெளியேற்றி அதன் பின்னர் சபாநாயகரின் கீழ் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அதில் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் பாதுகாப்புப் படைகளின் பிரதானி சவேந்திர சில்வா ஆகியோரின் தலையீடு இருப்பதைக் காண முடியும்.

அமைதியின்மைக்கு முந்தைய நாள், சவேந்திர சில்வா ஒரு நிகழ்வுக்காக இந்தியாவுக்கு அழைக்கப்பட்டு நாட்டை விட்டு வெளியேறினார். மற்ற அனைத்து ஆயுதப்படைகளின் உயர்மட்ட அதிகாரிகள் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இருந்தனர்.

அவர் இலங்கைக்கு திரும்பியதும் தேவையான சம்பவங்கள் நடந்து முடிந்துவிடும் வகையில் திட்டம் இருந்தது. இலங்கையில் இடைக்கால ஆட்சியை அமைக்க எண்ணியுள்ள வெளிநாட்டு சக்திகள் சவேந்திர சில்வாவை கட்டுப்படுத்த ஐ.நா.வின் குற்றச்சாட்டுகளைப் பயன்படுத்திக் கொண்டமை தெளிவாகத் தெரிகிறது.

அமெரிக்காவைச் சமாதானப்படுத்தவேண்டும் என்பதற்காகவே இவ்வாறான திட்டம் தீட்டப்பட்டது. இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கின் சில அறிவுறுத்தல்களை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவும் கடைப்பிடித்து வருகிறார்.

ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து அமெரிக்காவில் வசிக்கத் திட்டமிட்டிருந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதி அவ்வாறு செய்தார்-என்றார். (அ)

# இரு விமானங்களில் கோளாறு உள்ளக விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஏப். 28

அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகருக்கான விமான பயணத்தின்போது, தொழில்நுட்பக் கோளாறு காரணமாக விமானமொன்று மெல்பர்ன் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டமை தொடர்பில் சிறீ லங்கன் விமான சேவையூடாக உள்ளக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்ட கணினியின் பாகங்களை அதன் தயாரிப்பு நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டார்.

இதேவேளை, டுபாய் நோக்கி பயணத்தை ஆரம்பித்த விமானமொன்றில் ஏற்பட்ட உள்ளக அழுத்தம் காரணமாக ஏற்பட்ட சிக்கலால், குறித்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டமை தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பிலும் முன்னெடுக்கப்படும் விசாரணைகளை துரிதப்படுத்தி, அதனூடாக கிடைக்கும் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சிறீ லங்கன் விமான சேவை நிறுவனத்தின் உயர் அதிகாரிகளுக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார். (அ)

# ஆயுள்வேத வைத்தியர் கழுத்து வெட்டி கொலை

கொழும்பு, ஏப். 28

களுத்துறை வடக்கு கெலிடோ வீதியில் வீடொன்றின் பின்புறத்திலிருந்து கழுத்து வெட்டப்பட்ட நிலையில் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை வீட்டின் பின்புறத்தில் பெண்ணின் சடலத்தை பார்த்த அவரது மகள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

ஆயுள்வேத வைத்தியர் ஒருவரே கொலை செய்யப்பட்டுள்ள நிலையில், கொலை செய்வதற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கத்தியும் குறித்த இடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் சரத்துகளால் அடிப்படை உரிமை மீறல்

## சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 28

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் சில சரத்துகளால் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக அந்த சட்டமூலத்தை மீளாய்வு செய்ய நியமிக்கப்பட்ட குழு பரிந்துரை செய்துள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், செயலாளரின் கையொப்பங்களுடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்ட பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டமூலத்தை மீளாய்வு செய்வதற்காக விசேட குழுவொன்றை நியமித்ததாக இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் கூறியுள்ளது.

சட்டமூலத்தின் சில சரத்துகள் நீதியை நிலைநாட்டும் முறைமையை மீறும் வகையில் அமைந்துள்ளதாகவும் அது அடிப்படை உரிமைகளுக்கு முரணானது எனவும் குறித்த குழு கூறியுள்ளதாக சட்டத்தரணிகள் சங்கத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமூலத்தில் உள்ள குறித்த சரத்துகள் கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் பயணங்களை மேற்கொள்வதற்கான சுதந்திரம் உள்ளிட்ட உரிமைகளை மீறும் வகையில் அமைந்துள்ளதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் சட்டமூலத்தை திருத்துமாறு நீதி அமைச்சு உள்ளிட்ட அனைத்து தரப்பினரிடமும் கோரியுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

திருத்தமின்றி சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டால் அதனை ஆட்சேபனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுப்பதாக சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (அ)



# வவுனியாவில் பசு மாட்டை களவாடி இறைச்சிக்காக வெட்டிய திருடர்கள்!

வவுனியா, ஏப். 28

வவுனியாவில் தொழுவத்தில் இருந்த பசு மாட்டைத் திருடி இறைச்சிக்காக வெட்டிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா கல்வீரங்குளத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மாலை தொழுவத்தில் கட்டப்பட்ட பசு மாட்டைக் காணவில்லை. மாட்டின் உரிமையாளர் மற்றும் அயலவர்கள் பசு மாட்டைத் தேடியபோது அது இறைச்சிக்காக வெட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

இதனையடுத்து சிதம்பரபுரம் பொலிஸாருக்கு இச்சம்பவம் தொடர்பாக அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

அண்மைக்காலமாக வவுனியா மாவட்டத்தில் பரவலாக மாடு களவாடப்பட்டு வெட்டப்படும் செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. (அ)

# இரவு நேரத்தில் மாடு ஏற்ற வந்தவர்களை மடக்கிப் பிடித்த மாங்குளம் இளைஞர்கள்

முல்லைத்தீவு, ஏப். 28

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாங்குளம் பகுதியில் தொடர்ச்சியாக மாடுகள் களவாடப்படுவதாகவும் இது தொடர்பில் உரிய அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனவும் மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தமது வாழ்வாதாரமாக இருக்கின்ற 20 வரையான மாடுகள் இதுவரை திருடப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் தமக்கு எந்தவிதமான தீர்வும் கிடைக்கவில்லை எனவும் தொடர்ச்சியாக இவ்வாறு மாடுகள் களவாடப்பட்டு இரவு நேரங்களில் மாங்குளத்திலிருந்து கடத்திச் செல்லப்படுவதாகவும் இது தொடர்பில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியும் அவர்கள் நடவடிக்கை எடுக்கத் தவறி வருவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு மாங்குளம் நீதிபுரம் பகுதியில் இருந்து மாடுகள் வாகனத்தில் ஏற்றப்படுவதாக அறிந்த மக்கள் பொலிஸாருக்கு அறிவித்தும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு செல்லவில்லை.

அதனைத் தொடர்ந்து விசேட அதிரடிப் படையினருக்கு அறிவித்தபோது அவர்கள் மாடு ஏற்றும் இடத்துக்குச் சென்றபோதும் மாடுகளை ஏற்ற வந்தவர்களைக் கைது செய்யவில்லை. ஏற்றிய மாடுகளை இறக்கிவிட்டு வாகனத்தைக் கொண்டு செல்லுமாறு கூறிவிட்டுச் சென்றனர்.

இதனால் விசனமடைந்த இளைஞர்கள் நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் குறித்த பகுதியில் இருந்து மாடுகளை இறக்கிவிட்டு வந்த வாகனத்தை வீதியில் மறித்து பொலிஸாரை அழைத்து மாடு ஏற்றுவதற்காக வருகை தந்தவர்களையும் அவர்கள் வருகை தந்த இரண்டு வாகனங்களையும் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (அ)

# அமெரிக்க எரிபொருள் நிறுவனத்தின் செயல்பாடுகள் ஜூனில் ஆரம்பமாகும்

கொழும்பு, ஏப். 28

அமெரிக்காவின் ஆர்.எம். பாக்ஸ்-ஷெல் நிறுவனத்துடன் இடம்பெற்ற இணைய வழிச் சந்திப்பில், இலங்கையில் அந்த நிறுவனத்தின் எரிபொருள் விநியோகத்தை ஆரம்பிப்பது குறித்து தீர்மானமொன்று எட்டப்பட்டதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

அதன்படி, மே மாத நடுப்பகுதியில் ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதற்கும், ஜூன் முதலாவது வாரத்தில் செயல்பாடுகளைத் தொடங்குவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இதேவேளை, கடந்த வாரம் இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையத்துக்கு விஜயம் செய்த ஆர்.எம். பாக்ஸ்-ஷெல் தொழில்நுட்ப அதிகாரிகள், சர்வதேச தரம் மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்கு ஏற்ப முனையத்தின் வசதிகளை மேம்படுத்துவதற்கும் முன்வந்துள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர மேலும் தெரிவித்தார். (அ)

# இறைவரிச் சட்டத்தில் பல விசேட திருத்தங்கள்

கொழும்பு, ஏப். 28

வரிவிதிப்பு வரம்பை விரிவுபடுத்தும் நோக்கில் 2017 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் பல விசேட திருத்தங்கள் இன்று பாராளுமன்றத்தில் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

வரி செலுத்தும் செயல்முறைக்கு இலத்திரனியல் முறைகளை அறிமுகப்படுத்துதல், தடுத்து வைத்தல் வரி விலக்கை விரைவுபடுத்துதல் உள்ளிட்ட பல திருத்தங்கள் இதில் உள்ளடங்குவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- தனிப்பட்ட வருமான வரி செலுத்துவோருக்கு மின்னணு வழிமுறைகள் மூலம் வரிக் கணக்கு தாக்கல் செய்வதை கட்டாயமாக்கும் சட்டத்தை இது அறிமுகப்படுத்த உள்ளது.

எதிர்காலத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஒன்லைன் முறையை அணுகுவதற்கு இந்த முறை மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

புதிய திருத்தம் பண பரிவர்த்தனைகளை மேலும் ஊக்கப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குகிறது. மின்னணு பரிவர்த்தனைகள் மூலம் உண்மையான வரி வருமானத்தை கணக்கிட விரும்புகிறோம்.

ஒருவர் தினசரி 5 இலட்சம் ரூபாய்க்கு மேல் கொள்வனவு செய்தால், அவர்களது செலவினங்களில் இருந்து 5 இலட்சத்திற்கும் அதிகமான தொகையைக் கழிக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அனுமதிக்காது.

எனவே, அவர்கள் மின்னணுக் கட்டண முறையை பின்பற்ற வேண்டும்.

நிதி கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறும் அரச நிறுவனங்களின் பரிவர்த்தனைகள் தொடர்பில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அறிவிக்கவேண்டிய கட்டாயம் இதுவரையில் இல்லை.

ஆனால் இந்த புதிய திருத்தத்தின் மூலம் வங்கிகள், மோட்டார் போக்குவரத்து திணைக்களம் போன்ற நிதி கொடுக்கல் வாங்கல்கள் அடிக்கடி மேற்கொள்ளப்படும் நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு கட்டாயமாக அறிவிக்க வேண்டும்-என்றார்.

(அ)

# இலங்கையின் அபிவிருத்திக்கு தமிழர் பங்களிப்பு அவசியம்!

## பிரதமர் தினேஷ் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 28

நாட்டின் அபிவிருத்திக்கு உள்நாட்டுத் தமிழர்களினதும் புலம்பெயர் தமிழர்களினதும் பங்களிப்பு மிகவும் அவசியம் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள புலம்பெயர் தமிழர்கள் சிலர் முன்வந்துள்ளார்கள். அவர்களை வரவேற்கின்றோம். இந்தச் சிலர் என்ற எண்ணிக்கை பலராக - நூற்றுக்கணக்காக - ஆயிரக்கணக்காக - பல்லாயிரக்கணக்காக மாற வேண்டும் என்பதே எமது விருப்பம்.

உள்நாட்டில் வாழும் தமிழர்களும் நாட்டின் அபிவிருத்திக்குக் கூடுதலான பங்களிப்பை வழங்கவேண்டும்.



அப்போதுதான் வீழ்ந்த எமது நாட்டை விரைவில் மீளக்கட்டியெழுப்ப முடியும்.

நாட்டின் அபிவிருத்திக்குத் தமிழர்கள் பங்களிப்பு வழங்குவது போல் அவர்கள் எதிர்பார்க்கும் அரசியல் பிரச்னைக்கும் விரைந்து தீர்வு வழங்குவது அரசின் கடமை-என்றார்.

(அ)



# ஆசிரியர் கலாசாலையில் உலகப் புத்தகநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 28

உலகப் புத்தக நாளை நினைவுகூரும் நிகழ்வுகள் கடந்த 26 ஆம் திகதி புதன்கிழமை காலை கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றன.

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் மூத்த எழுத்தாளரும் பலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபருமாகிய கவிஞர் சோ. பத்மநாதன் கலந்துகொண்டு இன்றைய கல்வி முறை எதிர்கொள்ளும் சவால்கள் குறித்த சில சிந்தனைகள் என்ற பொருளில் உரையாற்றினார்.

கலாசாலை விரிவுரையாளர்கள் சார்பில் சி. மனோகரன் புத்தக நாள் பற்றிய சிறப்புரையை மேற்கொண்டார்.

நிகழ்வின் நிறைவில் கவிஞர் சோ.ப. கலாசாலைச் சமூகத்தவரால் கௌரவிக்கப்பட்டார்.

(அ)

# நயினாதீவில் புதிய மின்பிறப்பாக்கி குடிதண்ணீர்ப் பிரச்னைக்கும் தீர்வு!

யாழ்ப்பானம், ஏப். 28

நயினாதீவு பிரதேசத்தில் பழுதடைந்திருந்த மின்பிறப்பாக்கிக்கு பதிலாக சுமார் 300 மெகாவாட்ஸ் உற்பத்தி திறனுள்ள மின்பிறப்பாக்கி ஒன்று புதிதாக பொருத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் இலங்கை மின்சார சபையினால் இந்த மின்பிறப்பாக்கி பொருத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம், நயினாதீவுக்கு 24 மணித்தியால மின்சார விநியோகம் உறுதிப்படுத் தப்பட்டுள்ளதுடன், ஆர்.ஓ. திட்டத்தைச் சீராக செயற்படுத்தி நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு ஆகியவற்றுக்கான குடிதண்ணீர் விநியோகத்தை தொடர்ச்சியாக வழங்குவதற்கான வாய்ப்பும் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ரணிலின் கரங்களை பலப்படுத்தினால் தமிழர்கள் தீர்வை விரைவில் பெறலாம்!

## அமைச்சர் மனுஷ ஆலோசனை

கொழும்பு, ஏப். 28

**“தமிழ் மக்களும் அவர்களின் பிரதிநிதிகளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களைப் பலப்படுத்தினால் தீர்வை விரைவில் வென்றெடுக்க முடியும். அதைவிடுத்து இனவாத நோக்குடன் அரசு மீது விமர்சனங்களை முன்வைப்பதால் எதனையும் பெற முடியாது” - என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில்-

இது ராஜபக்ஷக்கள் தலைமையிலான ஆட்சி அல்ல; ரணில் தலைமையிலான ஆட்சி.

இந்த ஆட்சியில் இனவாதத்துக்கும், மதவாதத்துக்கு ஒரு போதும் இடமில்லை. தமிழர்களை அரவணைத்தே இந்த அரசு பயணிக்கின்றது.

இந்நிலையில், தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் சிலர் இனவாத நோக்குடன் எம்முடன் முட்டிமோதுகின்றனர்.



அரசை அவர்கள் இனவாதக் கண்ணோட்டத்துடன் நோக்குவதை உடன் நிறுத்த வேண்டும்.

நாட்டின் பொருளாதாரப் பிரச்னைக்குத் தீர்வு காணும் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் பிரச்னைக்கும் தீர்வு காணும் நடவடிக்கையில் நாம் அனைவரும் இறங்க வேண்டும்-என்றார்.

(அ)

# நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை மறைக்காமல் வெளிப்படுத்துங்கள்!

## அரசிடம் அஜித் பெரேரா வேண்டுகோள்

கொழும்பு, ஏப். 28

“சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை செய்துகொண்ட ஒப்பந்தத்தில் எதையும் மறைக்காமல் அரசு அப்படியே அந்த ஒப்பந்தத்தை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்” - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் முன்னாள் எம்.பியுமான அஜித் பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி கிடைத்ததும் சிலர் பட்டாசு சுட்டு மகிழ்ந்தார்கள். கஷ்டப்படும் மக்களுக்கு அப்படி உதவி கிடைத்தால் மகிழ்ச்சிதான். ஆனால், இதில் முக்கியமான ஒன்றைக் கவனிக்க வேண்டும். அதுதான் இந்தக் கடனைப் பெறுவதற்காகச் சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசு செய்துகொண்ட ஒப்பந்தம். அதில் எதையும் மறைக்காமல் அரசு அப்படியே அந்த ஒப்பந்தத்தை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும். இதை மக்கள் கட்டாயம் அறிய வேண்டும்.

அரசால் முகாமைத்துவம் செய்ய முடியாத அரச நிறுவனங்கள் கட்டாயம் தனியாரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஆனால், பெற்றோலியம் நட்டத்தில் ஓடவில்லை. அப்படி இருக்கும்



போது ஏன் புதிய பெற்றோல் செற்களை திறப்பதற்கு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்?

போட்டி கூடும்போது விலை குறைந்தால் பரவாயில்லை. இங்கு விலை பற்றி எந்தப் பேச்சும் இல்லை. இதனால் எமது பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப் போகின்றது-என்றார்.

(அ)

# வங்கிக் கட்டமைப்பு பாதிக்கப்படும் நிலை!

**சந்திம வீரக்கொடி எச்சரிக்கை**

கொழும்பு, ஏப். 28

**தேசிய கடன் மறுசீரமைக்கப்பட்டால்வங்கி கட்டமைப்பு பாதிக்கப்படும்.அதனால் சாதாரண வங்கி வைப்பாளர்கள், முதலீட்டாளர்கள் மோசமாக பாதிக்கப்படுவார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடிக்கு குறுகிய காலத்துக்குள் தீர்வு காண சர்வதேச நாணய நிதியத்தை தவிர்த்து மாற்றுத்திட்டம் ஏதும் இல்லாத காரணத்தால் நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

சர்வதேச கடன் மறுசீரமைக்கப்படும்,தேசிய கடன் மறுசீரமைக்கப்படமாட்டாது என அரசாங்கம் ஆரம்பத்தில் குறிப்பிட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் முதல் தவணை கிடைத்ததன் பின்னர் தேசிய கடன் மறுசீரமைக்கப்படும் என அரசாங்கம் குறிப்பிடுகிறது. தேசிய கடன் மறுசீரமைக்கப்பட்டால் வங்கி கட்டமைப்பு பாதிக்கப்படும். அதனால் சாதாரண வங்கி வைப்பாளர்கள், முதலீட்டாளர்கள் பாதிக்கப்படுவார்கள். சமூக கட்டமைப்பில் பாரிய நெருக்கடி ஏற்படும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முழுமையாக செயற்படுத்தினால் அரசியல்வாதிகள் எவரும் மக்கள் மத்தியில் செல்ல முடியாத நிலை ஏற்படும்.

ஆகவே ஜனாதிபதிக்கு புகழ்



பாடு அரசியல்வாதிகள் அனைவரும் சுய புத்தியுடன் சிந்தித்து செயற்பட வேண்டும். வழங்கப்பட்ட அடிப்படை ஆலோசனைகள் இலங்கையில் செயற்படுத்தப்படுகிறதா என்பதை சர்வதேச நாணய நிதியம் கண்காணிக்க வேண்டும்.-என்றார். (அ)

# பிரபல யூடியூப் சனலுக்கு நீதிமன்றம் தடை உத்தரவு!

கொழும்பு, ஏப். 28

சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் மற்றும் சிரேஷ்ட அரச சட்டத்தரணி ஒருவரின் நற்பெயருக்கு ஊறு விளைவிக்கும் 'யூடியூப்' காணொளிகளை ஒளிபரப்புவதைத் தடுக்கும் வகையில், சமூக ஊடக செயற்பாட்டாளர் தர்ஷன ஹந்துங்கொடவுக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் உட்பட சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த மூவரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவினை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட கொழும்பு மாவட்ட நீதவான் பூர்ணிமா பரணகம இந்த உத்தரவை பிறப்பித்தார்.

இந்த தடை உத்தரவுகளும் எதிர்வரும் மே 10 வரை அமுலில் இருக்கும் என்றும் நீதிபதி தமது உத்தரவில் அறிவித்தார்.

சமூக ஊடகங்களில் பெரிதும் விவாதிக்கப்படும் ஒரு தலைப்பான எக்ஸ்பிரஸ் பேர்ள் பேரழிவுக்கான இழப்பீடு குறித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பில் தவறான தகவல்களை ஒளிபரப்புவதை இந்த உத்தரவு தடுக்கிறது.

கடந்த 20 ஆம் திகதி இந்த விடயம் தொடர்பாக தவறான தகவல்களை உள்ளடக்கிய காணொளியை பிரதிவாதி தனது வாடிக்கையாளர்களுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் ஒளிபரப்பியதாக மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தார்.

இழப்பீடு தொகையாக பாதிக்கப்பட்ட இருவருக்கு 500 மில்லியன் ரூபா வீதம், ஒரு பில்லியன் ரூபாவை நட்டஈடாகவும் நீதிமன்றில் மனுதாரர்கள் கோரியிருந்தனர். (அ)

# தந்தை செல்வா நினைவுத் தூபி தெல்லிப்பழையில் திரைநீக்கம்!

யாழ்ப்பாணம், ஏப். 28

தந்தை செல்வாவின் 46ஆவது நினைவு ஆண்டில் அவரது நினைவுத் தூபியொன்று தெல்லிப்பழையில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

தெல்லிப்பழையில் அமைந்துள்ள சேமக்காலையில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் குறித்த நினைவுத் தூபி தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழுத் தலைவரும் தென்னிந்திய திருச்சபையின் ஓய்வுநிலை பேராயருமான சு.ஜெபநேசனால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

கலைஞர் தவ.தஜேந்திரனால் நினைவுத் தூபி வடிமைக்கப்பட்டதுடன் இருபாலையிலுள்ள சஹானா சிற்பாலயம் சிற்ப வடிவமைப்பை மேற்கோண்டது.

இந்த நிகழ்வில் தென்னிந்திய திருச்சபையின்



பேராயர் வே.பத்மதயாளன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, மதகுருமார்கள், தந்தை செல்வா அறக்கட்டளை அங்கத்தவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# 8 ஆயிரம் இலங்கையருக்கு கொரிய தொழில்வாய்ப்பு

கொழும்பு, ஏப். 28

இலங்கையர்களுக்கான கொரிய தொழில் வாய்ப்புக்கான எண்ணிக்கையை 8 ஆயிரமாக அதிகரிக்க இணக்கம் காணப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

கொரிய மனித வள திணைக்களத்தின் பிரதானிகளுக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

கொரிய மொழி ஆற்றலைக் கொண்டு இணையத்தளத்தின் மூலம் தொழில்வாய்ப்பை எதிர்பார்த்துள்ள 600 பேரை, கப்பல் கட்டுமானத் தொழில்துறையில் ஈடுபடுத்துவதற்கு இதன்போது உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (அ)

# அதிவேக நெடுஞ்சாலை கட்டணங்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 28

நாடளாவிய ரீதியில் அனைத்து அதிவேக நெடுஞ்சாலைகளிலும் அறவிடப்படும் நுழைவுக் கட்டணத்தை திருத்தியமைத்து விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இது போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனவினால் 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

தற்போதுள்ள கட்டணம் 25 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கொட்டாவ - கட்டுநாயக்கவுக்கான புதிய கட்டணம் 400 ரூபா, கட்டுநாயக்கவில் இருந்து அம்பாந்தோட்டைக்கு 1300 ரூபாவும் கொட்டாவையில் இருந்து காலிக்கு 500 ரூபாவுமாக கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

# அனர்த்த நிலைமைகளை முன்னறிவிக்க புதிய தொழில்நுட்ப, நிபுணத்துவ முறை!

கொழும்பு, ஏப். 28

எதிர்காலத்தில் ஏற்படக்கூடும் அனர்த்த நிலைமைகளை மக்களுக்கு தெளிவுப்படுத்துவதற்காக புதிய தொழில்நுட்ப மற்றும் நிபுணத்துவ முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்த முறைமை சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் முன்னெடுக்கப்படவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் சுதந்த ரணசிங்க தெரிவித்தார்.

அதேநேரம், கரையோரப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு அனர்த்த நிலைமைகளை முன்கூட்டி அறிவிக்கும் நோக்கிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி, அந்த மக்களுக்கு வட்சப் ஊடாக தகவல்ளை பரிமாறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் சுதந்த ரணசிங்க கூறினார். (அ)

# பொருளாதார வீழ்ச்சிக்கு பி.பி.ஜயசுந்தரவே காரணம்



**அமைச்சர் பந்துல குற்றச்சாட்டு**

கொழும்பு, ஏப். 28

நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் பி.பி.ஜயசுந்தரவே, அனைத்து அரசியல் தலைவர்களின் நெறியாள்கையிலும் பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தியவர் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றில் உரையாற்றியபோதே அமைச்சர் பந்துல குணவர்தன இதனை கூறினார்.

அத்துடன் பொருளாதார நெருக்கடிக்கு பாராளுமன்றமும் பொறுப்புக் கூறவேண்டும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதாரத்தில் அவதானம் செலுத்தவேண்டிய பிரதான தரப்பாக பாராளுமன்றம் செயற்பட்டிருக்கவேண்டும்.

ஆனால் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியை நோக்கிப் பயணிக்கையில் பாராளுமன்றம் ஏனைய எளிமையான விடயங்களில் கவனத்தை செலுத்தியிருந்தது-என்றார்.

அத்துடன் நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் பிபி ஜயசுந்தரவை பொருளாதார கொலைக்காரன் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ விமர்சித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிங்கப்பூர்:

# கஞ்சா வழக்கில் தூக்கிலிடப்பட்டார் தங்கராஜூ சுப்பையா என்ற தமிழர்!



## கடைசி நேரத்தில் என்ன நடந்தது?

சிங்கப்பூரில் கஞ்சா கடத்தியதாக தமிழர் ஒருவருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. மரண தண்டனை வேண்டாம் என்று ஐ.நா. உள்பட உலகம் முழுவதும் இருந்து வந்த வேண்டுகோள்களை சிங்கப்பூர் அரசு புறந்தள்ளிவிட்டது.

தங்கராஜூ சுப்பையா (46) என்கிற அந்த நபருக்கு சாங்கி சிறைச்சாலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டதாக அவரது குடும்பத்தினர் கூறினர்.

பலவீனமாக சாட்சிகள், விசாரணையின் போது மிகக் குறைந்த சட்ட உதவி ஆகியவற்றைக் கொண்டே அவர் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டதாக மரண தண்டனைக்கு எதிரான ஆர்வலர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.



### சிறைச்சாலையில் திரண்ட தங்கராஜூ சுப்பையா உறவினர்கள்

ஆனால், எல்லாம் உரிய முறைப்படி நடந்ததாகக் கூறும் சிங்கப்பூர் அரசு அதிகாரிகள், நீதிமன்ற தீர்ப்பை கேள்விக்குள்ளாக்கும் ஆர்வலர்களை விமர்சிக்கின்றனர்.

தூக்குத்தண்டனை நிறைவேற்றத்தை முன்னிட்டு, சாங்கி நகரின் கிழக்கில் உள்ள சிறைச்சாலையில் தங்கராஜ் சுப்பையாவின் உறவினர்கள் திரண்டிருந்தனர்.

தங்கராஜூவின் வாழ்க்கை, தூக்கு தண்டனையில் முடிந்தாலும் கூட சிங்கப்பூரின் சட்ட அமைப்பில் சீர்திருத்தங்களுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுப்போம் என்று தங்கராஜூவின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

“என் அண்ணனுக்கு இப்படி ஒரு அநியாயம் நடக்கலாம். அது வேறு யாருக்கும் நடக்கக் கூடாது. அதனால் தொடர்ந்து போராடுவேன், என்கிறார் தங்கராஜூவின் சகோதரி லீலா.

“கடைசி வரை அவரை விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்று குடும்பத்தினர் கூறினர். இது அவர்களுக்கு ஒரு வேதனையான அனுபவம்,” என்று மரண தண்டனைக்கு எதிரான செயல்பாட்டாளர் கிர்ஸ்டன் ஹான் தெரிவித்தார்.

“இந்த வழக்கிலும், தங்கராஜ் சுப்பையாவுக்கு எதிரான ஆதாரங்களிலும் அவர்களுக்கு இன்னும் பல விடை தெரியாத கேள்விகள் இருக்கின்றன” என்றும் அவர் கூறினார்.

### தங்கராஜூ மீதான குற்றச்சாட்டுகள் என்ன?

46 வயதான தங்கராஜூ, 2013 ஆம் ஆண்டு மலேசியாவிலிருந்து சிங்கப்பூருக்கு 1 கிலோ கஞ்சாவை டெலிவரி செய்யும் சதியில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டார்.

டெலிவரி செய்யும் போது அவர் பிடிபடவில்லை என்றாலும், அந்த கஞ்சா கைமாறும் செயல்பாட்டை ஒருங்கிணைக்கும் பொறுப்பை அவர் வகித்தார் என்று அரசு வழக்கறிஞர்கள் குற்றம்சாட்டினர். மேலும் தங்கராஜூவுக்காக டெலிவரி செய்த நபர் பயன்படுத்திய இரண்டு செல்பேசிகளும் விசாரணையில் கண்டறியப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்த வழக்கில் தொடர்புடைய மற்றொரு நபர் தாம் இல்லை என்று தங்கராஜூ வாதிட்டார். தமது ஒரு செல்பேசி தொலைந்து போய் விட்டதாகவும் பொலீஸார் கண்டுபிடித்த மற்றொரு செல்பேசி தன்னுடையது இல்லை என்றும் தங்கராஜூ மறுத்தார்.

சிங்கப்பூர் சட்டம் போதைப்பொருள் கடத்தலுக்கு மரண தண்டனையை கட்டாயமாக்குகிறது. அதை விநியோகிக்கும் நபர்களுக்கு குறைவான தண்டனைகள் விதிக்கப்படும்.

2018-ம் ஆண்டு தங்கராஜூ சுப்பையா குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக அவரது குடும்பத்தினர் செய்த கடைசி நேர மேல் முறையீடுகளை சிங்கப்பூர் நீதிமன்றங்கள் நிராகரித்து விட்டன.

இந்த வழக்கில் தங்கராஜூவின் கடைசி மேல்முறையீட்டில், கஞ்சா டெலிவரியை ஒருங்கிணைக்கும் பொறுப்பை வகித்தது தங்கராஜூ தான் என்ற அரசு தரப்பு வாதத்தை ஏற்க முகாந்திரம் இருப்பதாக நீதிபதி கூறினார். இதனால் மென்மையான தண்டனைக்கு தங்கராஜூ தகுதியற்றவர் ஆகிறார் என்று நீதிபதி தீர்ப்பளித்தார்.



### மனித உரிமை ஆர்வலர்கள் கவலை

தங்கராஜூவுக்கு மொழிபெயர்ப்பாளருக்கான போதிய அணுகல் வழங்கப்படவில்லை என்றும் அவரது குடும்பத்தினர் ஒரு வழக்கறிஞரைப் பெற முடியாமல் போனதால் தனது கடைசி மேல்முறையீட்டை தங்கராஜூவே வாதிட வேண்டியிருந்தது என்றும் செயல்பாட்டாளர்கள் கவலைகளை வெளிப்படுத்தினர்.

ஆனால், இந்த வழக்கு விசாரணையின் போது தான் தங்கராஜூ மொழிபெயர்ப்பாளரைக் கோரினார் என்றும் அதற்கு முன்பாக அவர் அதை கோரவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

2022 ஆம் ஆண்டு அறிவுத்திறன் குறைபாடு உடைய நாகேந்திரன் தர்மலிங்கம் வேறொரு வழக்கில் தூக்கிலிடப்பட்டார். அந்த நடவடிக்கையை கடுமையாக விமர்சித்த சர் ரிச்சர்ட் பிரான்சன், தங்கராஜூவின் வழக்கு “பல நிலைகளில் அதிர்ச்சியளிக்கிறது” என்று கூறுகிறார்.

“சிங்கப்பூரின் நற்பெயருக்கு ஏற்கெனவே மரண தண்டனை விதிக்கும் வழக்கம், ஒரு அழியாத கறையாக உள்ளது. இதுபோன்ற பாதுகாப்பற்ற தண்டனையை (மரண தண்டனை) நிறைவேற்றுவது பிரச்னையை மேலும் மோசமாக்கும்” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், ரிச்சர்ட்டின் குற்றச்சாட்டுகளை மறுத்த சிங்கப்பூர் உள்துறை அமைச்சகம், அவரது கூற்றுகள் உண்மைக்குப் புறம்பானவை என்றும் “சிங்கப்பூர் நீதிபதிகள் மற்றும் குற்றவியல் நீதி அமைப்பை அவர் அவமதிக்கிறார்” என்றும் குற்றம் சாட்டியது.

சிங்கப்பூரை பாதுகாப்பாக்கும் அரசின் பல்நோக்கு அணுகுமுறையில் மரண தண்டனை “ஒரு முக்கிய அங்கம்” என்றும் உள்துறை கூறுகிறது.

சிங்கப்பூர் மரண தண்டனைக்கு எதிரான வழக்கறிஞர் குழுவான டிரான்ஸ்பார்மேட்டிவ் ஜஸ்டிஸ் கலெக்டிவ் செய்தித் தொடர்பாளர் கிர்ஸ்டன் ஹான், இந்த விஷயத்தில் அரசாங்கம் அழுத்தத்திற்கு உள்ளாக விரும்பவில்லை என்று தெரிவித்தார்.

“சர்வதேச அரங்கிலும் ஐ.நா.விலும் சிங்கப்பூர் தமது நிலைப்பாட்டை நியாயப்படுத்தும் வகையில், குடிமக்களின் பெயரால் மக்களைக் கொல்லும் உரிமையைப் பாதுகாப்பது சிறப்பானது என்பதற்காக அதை நினைத்து நாம் பெருமைப்பட வேண்டியதில்லை,” என்று அவர் கூறினார்.

### மலேசியாவில் மரண தண்டனை இல்லை - தாய்லாந்தில் கஞ்சா விற்க அனுமதி

சிங்கப்பூரில் உலகின் மிகக் கடுமையான போதைப்பொருள் எதிர்ப்புச் சட்டங்கள் உள்ளன. அவை சமூகத்தைப் பாதுகாக்க அவசியம் என்று வாதிடுகிறது அந்நாட்டு அரசு.

சிங்கப்பூரில் கடந்த ஆண்டு போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக 11 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. அதில் அறிவுசார் குறைபாடு உடையவரும் ஒருவர். ஹெராயின் கடத்தியதாகக் கூறி தூக்கில் போடப்பட்டார்.

போதைப்பொருளுக்கு எதிரான சிங்கப்பூரின் கடுமையான விதிகளும், மரண தண்டனையும் அதன் அண்டை நாடுகளின் சமீபத்திய நடவடிக்கைகளுக்கு முரணாக இருப்பதாக ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

மரண தண்டனையே கிடையாது என்று அறிவித்துள்ள மலேசியா, குற்றங்களைத் தடுப்பதற்கான அரணாக அது இல்லை என்று திட்டவட்டமாக கூறியுள்ளது. கஞ்சா வர்த்தகத்தை அங்கீகரித்த உலகின் பல நாடுகளில் தாய்லாந்தும் ஒன்று. அங்கே, கஞ்சா வர்த்தகம் ஊக்குவிக்கப்படுகிறது. (பிபிசி)



# பொருளாதார நெருக்கடிகளோடு விவசாயிகளை பந்தாடும் யானைகள்

**க. விஜயரெத்தினம்**

இலங்கை மக்களை பொறுத்தவரை மிக அதிக எண்ணிக்கையிலான தொழில் முயற்சியாளர்களில் விவசாயிகளும் அடங்குகின்றனர். குறிப்பாக, ஜீவனோபாயமாக விவசாயத்தையே பெரிதும் நம்பி தங்கி இருக்கின்றனர். எல்லா மாகாணங்களிலுமே விவசாய செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால், அனைத்து மாகாணங்களின் விவசாயிகளும் எதிர்நோக்கி வருகின்ற பிரச்னைகள் பொதுவானவையாகவே உள்ளன- அவை பாரதூரமானவையும் கூட.

பொருளாதார நெருக்கடிகளை விளிம்புநிலை மக்கள் குழுமத்தினர் இன்னல்களுடன் எதிர்கொண்டுவரும் நிலையில் புயல், மழை, வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்கள், பசளைகள், கிருமிநாசினிகள், எரிபொருட்கள் ஆகியவற்றுக்கான தட்டுப்பாடுகள் மற்றும் விலை ஏற்றங்கள், அரசாங்க திணைக்களங்களின் காணி பிடிப்பு நடவடிக்கைகள், பூச்சிகளின் தாக்கங்கள், யானைகள், கட்டாக்காலிகள், பறவைகளின் பாதிப்புகள் என்பன விவசாயிகள் பொதுவாக எதிர்கொள்ளும் பாதிப்புகளாகும். இதில், யானைகளின் தாக்கம் ஒவ்வோர் ஆண்டும் அதிரித்துச் செல்கின்றது.

வனாந்தரங்களை அண்டிய கிராமங்களில் வயல் செய்கின்ற, வாழ்கின்ற மக்களுக்கும் காட்டு யானைகளுக்கும் இடையில் தொடர்ச்சியான - நீண்ட - தசாப்த கால யுத்தம் இடம்பெற்று வருகின்றது. இது தற்போது அதீத உக்கிரம் அடைந்துள்ளது.

விவசாயிகள் மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியில், அதிக பிரயத்தனங்களை மேற்கொண்டே விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். சொந்த வயல்களில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும் உள்ளார்கள். அதேபோல ஒத்திக்கு (குத்தகைக்கு) வயலை பெற்று விவசாயம் செய்பவர்களும் உள்ளனர். வங்கிகளிடம் அல்லது தனிப்பட்ட நபர்களிடம் வட்டிக்கு கடன் பெற்றும் விவசாயம் செய்கின்றனர்.

> **வாகரையில் உள்ள வயல்களில் யானைகளை விரட்டுவதற்காக தேனீக்களை வளர்க்கின்றனர். தேனீக்களால் யானைகள் அந்த பக்கமே தலை காட்டமாட்டாது என்பது விவசாயிகளின் அனுபவபூர்வ உண்மையாகும்.**

விவசாய நடவடிக்கைகளில் ஒவ்வொரு கட்டத்தின்போதும் பல ஆயிரம் ரூபாயை செலவிட நேர்கின்றது. அறுவடைக்கு தயாராகின்றபோது காட்டு யானைகளின் ஆக்கிரமிப்பை எதிர்கொள்ள நேர்கின்றது. யானைகள் நெல்லை தின்பதற்காக வயல்களுக்கு படை எடுத்து வருகின்றன. வயல்களை துவம்சம் செய்கின்றன. இதனால், காவலுக்கு ஆட்களை நிறுத்த வேண்டிய தேவை விவசாயிகளுக்கு ஏற்படுகின்றது. காவலாளிகள் தங்குவதற்கு வாடிகள் அமைத்து கொடுக்கின்றனர். வாடிகளை நிர்மாணிக்கவும் இதேபோல மின்சார வேலிகளை நிறுவுவதற்கும் சில இலட்சம் ரூபாய்களை செலவிட நேர்கின்றது. காவலாளிகளுக்கு ஒரு நாளைக்கு இரண்டாயிரம் ரூபாய் வரை கூலி கொடுக்க வேண்டும். ஆனால், இவற்றால் எல்லாம் போதிய பலன்கள் கிடைப்பதில்லை.



> **“மனிதர்களின் வாழ்வுரிமையையும் யானைகள் பறிக்கின்றன. ஆனால், யானைகளை துன்புறுத்துவதும் கொல்வதும் தண்டனைக்கு உரிய குற்றங்கள். வெடிகள் போன்றவற்றுக்கு யானைகள் பழக்கப்பட்டு இருப்பதால் இவற்றை விரட்ட வித்தியாசமாக சிந்தித்து செயல்பட வேண்டியுள்ளது. பனை ஓலைகளில் நெருப்பை கொளுத்தி எறிந்தால் யானைகள் மிரண்டு ஓடி விடும் என்று அனுபவத்தில் கண்டு கொண்டேன்” - என்று அம்பாறை காரைதீவைச் சேர்ந்த ஓய்வுநிலை பிரதி அதிபரும் விவசாய ஆர்வலருமான எஸ். தில்லையம்பலம் தெரிவித்தார்.**

யானைகளை துரத்துவதற்கு வன ஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகளின் உதவி, ஒத்தாசைகளை பெற வேண்டி ஏற்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது இலஞ்சம், ஊழல் தலை விரித்தாடுவதும் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. ஒரு முறை விசேடமாக கவனிக்காவிட்டால் அடுத்த முறை இந்த அதிகாரிகள் வரவேமாட்டார்கள். விவசாயிகள் அறுவடையை வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்த பிற்பாடும் வேறுவிதமாக யானைகளின் அட்டகாசம் தொடர்கின்றது. அவை வீடுகளுக்கே வந்து விடுகின்றன.

விவசாயிகள் எதிர்நோக்குகின்ற இன்னுமொரு பிரச்னையும் இங்கு இருக்கின்றது. காட்டு யானைகளால் தாக்கப்படலாம் என்ற அச்சம்கூட அவர்களை பொருளாதார ரீதியாக பெரிதும் பாதிக்கின்றது. யானைகள் மீதான அச்சத்தால் கதிர்கள் முற்றும் முன்பாகவே அவசரப்பட்டு அறுவடை செய்கின்றனர். இதனால் மிகக் குறைந்த விலைக்குத்தான் நெல்லை விற்பனை செய்ய வேண்டி ஏற்படுகின்றது. இது பெரும் நஷ்டத்தை ஏற்படுத்துகின்றது.

விவசாயிகளில் கணிசமானவர்கள் யானைகளின் தொல்லையால் விவசாயத்தை தவிர்க்கின்றனர். இவர்களில் பலர் சொந்த விவசாய நிலங்களை குறைந்த விலைக்கு விற்பனை செய்துள்ளனர். சிலர் அகப்பட்ட பெறுமதிக்கு ஒத்திக்கு கொடுத்துள்ளனர். விளைச்சல் ஒத்தி நடைமுறையில் அதிகரித்து வருகின்றது. அதாவது வயலை ஒத்திக்கு பெறுபவர் அறுவடையின்போது அவர் விரும்புகின்ற எண்ணிக்கையிலான நெல் மூடையை ஒத்தியாக வழங்குவதை காண முடிகின்றது.


மட்டக்களப்பு மாவட்டத்தில் வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு, கிரான், வாகரை, செங்கலடி போன்ற பிரதேச செயலக பிரிவுகளில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. இப்பகுதிகளில் விவசாயிகள் மாத்திரமல்ல பொதுமக்களும் அச்சத்தில் உறைந்துள்ளனர். கடந்த கால உயிரிழப்புகள், பொருளிழப்புகளால் அவர்களின் இயல்பு வாழ்க்கை குழம்பியுள்ளது.

வக்கி எல்லைக்கான வட்டவிதானை சாமித்தம்பி வெள்ளைக்குட்டி கூறுகையில்,

“நாங்கள் யுத்தத்துக்கு பின்னர் குடியேற்றப்பட்ட இடத்தில் வாழ்ந்து வருகின்றோம். நாளாந்தம் எங்கள் கிராமத்தை காட்டு யானைகள் ஆக்கிரமிக்கின்றன. உயிரை கையில் பிடித்தவாறுதான் நித்திரை கொண்டு எழும்புகின்றோம். எங்கள் உடைமைகள், விவசாயம், வீட்டு தோட்டம் போன்றவை அழிக்கப்படுகின்றன. காட்டு யானைகளில் இருந்து எங்களையும், எங்கள் பொருளாதாரத்தையும் பாதுகாத்து தருமாறு அரசாங்கத்திடம் கோருகின்றோம்.”




இது தொடர்பில், மட்டக்களப்பு மாவட்ட வன விலங்கு பரிபாலன முன்னாள் பொறுப்பதிகாரி ஆர். சம்சுதீனிடம் கேட்டபோது, “மாவட்டத்தில் பல இடங்களில் குறிப்பாக படுவான்கரை பிரதேசங்களில் காட்டு யானைகளின் தொல்லை உள்ளது. பொதுமக்களையும் அவர்களின் உடைமைகளையும் பாதுகாப்பதில் எமது திணைக்களம் அலுவலகங்களை அமைத்து, யானை வெடி கொடுத்து விழிப்பூட்டி வருகிறது. இருந்தாலும் அநேக சந்தர்ப்பங்களில் யானைகளிடம் இருந்து பொதுமக்களையும் பொருளாதாரத்தையும் எங்களால் பாதுகாக்க முடிவதில்லை. யானை வெடிகளுக்கும் யானை வேலிகளுக்கும் யானைகள் பழகி விட்டன. வன விலங்கு திணைக்களத்தில் போதிய ஆளணி கிடையாது. காட்டு யானைகள் தொடர்பாக பொதுமக்கள் மிகுந்த அவதானத்தோடு இருக்க வேண்டும்”என்கிறார்.



வெல்லாவெளி பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி, “மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் இதுவரையும் யானைகளின் தாக்குதலில் 18 பேர் உயிரிழந்தனர். 6 பேர் படுகாயம் அடைந்திருக்கின்றனர். எமது பிரதேசத்தில் கலமந்தன்வெளி, தும்பாலை, நாற்பதாம் கிராமம், வைக்கிஎல்லை, இராணமடு போன்ற பிரதேசங்களில் யானைகளை காண முடிகிறது. அருகில் மக்கள் குடியிருக்கின்றனர். பொதுமக்களும், விவசாயிகளும் அன்றாட நடவடிக்கைகளை செய்ய முடியாமல் அச்சத்தில் வாழ்கின்றனர். யானைகளின் தொல்லைகளில் இருந்து பொதுமக்களை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும்.” -என்கிறார் அவர்.

அரசாங்கமும் அரசியல்வாதிகளும், அரசாங்க அதிபர் உள்ளிட்ட உயரதிகாரிகளும் காட்டு யானைகளின் தாக்குதல்களில் இருந்து பயிர்களையும் மனித உயிர்களையும் காப்பாற்ற வேண்டும் என்று வலியுறுத்தி ஒரு தசாப்த காலத்துக்கு முன்னரும் வெல்லாவெளி பிரதேசத்தில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இது தொடர்பில் பி. பி. சி. போன்ற சர்வதேச ஊடகங்களின் கவனத்தையும் ஈர்த்திருந்தது. அரச நடவடிக்கைகளை முடக்கி முன்னெடுத்த இந்தப் போராட்டத்தின் பின்னரும்கூட அரசாங்கத்தின் - அதிகாரிகளின் கவனத்தை ஈர்ப்பது குறித்து மக்களும் விவசாயிகளும் சிந்தித்தவாறே உள்ளன.

யானைகளால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு காப்புறுதிகள், இழப்பீடுகள் கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

காட்டு யானைகளால் விவசாயிகள் எதிர்கொண்டு வருகின்ற பிரச்னைகளுக்கு தீர்வு காண்கின்ற முன்னெடுப்புகள், முயற்சிகள் ஆகியவற்றில் விவசாய அமைச்சு, வன விலங்குகள் அமைச்சு ஆகியன ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்போல ஒருமித்து செயல்பட வேண்டும். இதேபோல மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கமும் ஒருமித்து செயல்பட வேண்டும். மாகாணங்களின் ஆளுநர்கள் கூடுதலான நிதி ஒதுக்கீடுகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். காட்டு யானைகளின் அட்டகாசங்களால் பாதிக்கப்படுகின்ற விவசாயிகளின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு, அமைச்சரவை குழு, பாராளுமன்ற உப குழு போன்றவை நியமிக்கப்படுவது தீர்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்தும். அரசாங்கத்தின் வரவு - செலவு திட்டத்தில் கூடுதலான ரொக்க நிதி காட்டு யானைகளின் பிரச்னையை கையாள்வதற்கும், பாதிக்கப்படுகின்ற விவசாயிகளுக்கு நியாயமான இழப்பீடு வழங்குவதற்கும் ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். இதேபோன்று, புலம்பெயர் வாழ் மக்களும் விவசாய சமூகத்துக்கு உதவ முன்வரவேண்டும்.



காரைதீவு கமநல சேவைகள் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி மார்க்கண்டு சிதம்பரநாதன் இன்னும் சில மாதங்களில் அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். அவரின் அனுபவத்தின்படி யுத்தத்துக்கு பின்னரான காலப்பகுதியில் யானைகளின் அட்டகாசம் பெரிதும் அதிகரித்துள்ளது. யானைகளின் தொல்லையை குறைக்க அவர் ஆலோசனையை முன்வைக்கிறார்.

அதாவது, அருகருகே இருக்கும் வயல்களை சேர்ந்த விவசாயிகள் குழுவாக இணைந்து வயல் எல்லைகளில் சூரிய மின்சாரத்தில் இயங்குகின்ற வகையில் மின்சார கம்பிகளால் நீளமான - தொடர் வேலிகள் அமைக்க வேண்டும். இதற்கான செலவு ஒப்பீட்டளவில் குறைவு என்பதுடன் தனி ஒரு விவசாயியையும் பெரிதாக தாக்காது. அத்துடன், இந்த மின்சார கம்பிகளை தாண்டி யானைகள் வயலுக்குள் நுழைய மாட்டாது. யானை வேலிகளுக்கு அருகில் அகழிகளை தோண்டுகின்ற செயல் திட்டமும் பரிசீலிக்கப்படுன்றது. 10 அடி அகலமும், 10 அடி ஆழமும் கொண்ட அகழிகள் பொருத்தமானவை என்று துறை சார்ந்த நிபுணர்கள் கூறுகின்றனர். மாவட்ட செயலகங்களில் இவை குறித்து ஆலோசிக்கப்படுகின்றது. எனவே, யானைகளின் தொல்லைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியது அவசரமும் - அவசியமுமாகும். ●

### எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம்

# இலஞ்சம் வாங்கிய நபருக்கும் அரசுக்கும் இடையில் தொடர்பு

## ஐக்கிய மக்கள் சக்தி சந்தேகம்

கொழும்பு, ஏப். 28

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில் இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் நபருக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் தொடர்புகள் காணப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தி சந்தேகம் வெளியிட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இவ்வாறு சந்தேகம் வெளியிட்டார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், “இலஞ்ச ஊழல் ஒழிப்பு சட்ட மூலம் தொடர்பில் பெரிதாகப் பேசிக் கொண்டிருப்பவர்களின் அரசாங்கத்திலேயே இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு நீர் மற்றும் மின் கட்டணங்களை அதிகரிப்பது தீர்வாகாது.

ஊழல், மோசடியாளர்களை இனங்கண்டு அவர்களால் கொள்ளையிடப்பட்டு தேசிய சொத்துக்களை பறிமுதல் செய்தால் நாட்டின் பெருமளவான பிரச்னைகளுக்கு தீர்வு கிட்டும்.

சாமர குணசேகர என்ற நபருக்கு அரசாங்கத்துடன் ஏதேனும் தொடர்புகள் காணப்படுகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

காரணம் அரசாங்கத்துடன் தொடர்பற்ற ஒருவரால் இவ்வாறு செயற்பட்டிருக்க முடியாது.

எனவே இது தொடர்பில் உண்மைகளை வெளிக்கொண்டு வருவதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிக்குமாறு கோருகின்றோம்.

இதற்கான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுப்பதற்கு நாடாளுமன்றத்திலுள்ள சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து அரசாங்கத்திற்கு அழுத்தம் பிரயோகிக்கத் தீர்மானித்துள்ளோம்.

கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கலந்துரையாடலில் இது தொடர்பில் ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டது.“-என்றார். (அ)

# ஆறு முஸ்லிம் அமைப்புக்கள் மீதான தடையை நீக்கும் முயற்சியில் ரணில்!

கொழும்பு, ஏப். 28

பாதுகாப்பு அமைச்சின் தடைப் பட்டியலில் உள்ள 11 முஸ்லிம் அமைப்புகளில் 6 அமைப்புக்கள் மீதான தடையை நீக்குவதற்கு தேவையான இறுதிக் கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என ஜனாதிபதி தம்மிடம் கூறினார் என பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

விரைவில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவது தொடர்பில் ஜனாதிபதி, சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து முஸ்லிம் அமைப்புக்களின் தடை நீக்கம் குறித்து கலந்துரையாடியபோது, ஜனாதிபதி இதனை கூறினார் என பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் குறிப்பிட்டார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நாங்கள் முன்வைத்த வேண்டுகோளின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பில் இதற்கான நடவடிக்கைகள் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டதுடன் தடை செய்யப்பட்டவற்றில் 6 அமைப்புகள் எவ்வித பயங்கரவாத சம்பவங்களுடனோ பயங்கரவாத அமைப்புகளுடனோ தொடர்பைக் கொண்டிருக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியதாக அவர் கூறினார்.

அதனால் அந்த அமைப்புகள் மீதான தடைகள் நீக்கப்பட வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார். (அ)

# 10 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் கைதானார்

புத்தளம், ஏப். 28

புத்தளம், கருவலகஸ்வெவ பகுதியில் 10 கிலோ கஞ்சாவுடன் 23 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக கருவ லகஸ்வெவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 8 ஆம் இலக்க கட்டைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டாரென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது சந்தேக நபரிடமிருந்து 10 கிலோ 153 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. சந்தேக நபர் புத்தளம் நீதிவான் நீதிமன்றில் முற் படுத்தப்பட்டார்.

# இன அழிப்பில் ஈடுபட்டோருக்கு ஆஸியும் தடை விதிக்க வேண்டும்!

## தமிழ் ஏதிலிகள் பேரவை கோரிக்கை

சிட்னி, ஏப். 28

ஈழத்தமிழர்களுக்கு எதிராக இலங்கையில் இனஅழிப்பு குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களிற்கு எதிராக அவுஸ்திரேலிய அரசாங்கம் தடைகளை விதிக்கவேண்டும் என தமிழ் ஏதிலிகள் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மனித உரிமைகள் மீறலால் இலங்கையின் வடமேல் மாகாணத்தின் ஆளுநர் வசந்தகரன்னகொடவும் அவரின் குடும்பத்தினரும் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு அந்த நாட்டு அரசாங்கம் தடை விதித்துள்ளது என தமிழ் ஏதிலிகள் பேரவை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையின் வடமேல் மாகாணத்தின் ஆளுநராக சமீபத்தில் நியமிக்கப்பட்ட இலங்கை கடற்படையின் முன்னாள் தளபதி வசந்தகரன்னகொட ‘நேவி 11’ விவகாரத்துடன் தொடர்புடையவர் என தெரிவித்துள்ள தமிழ் ஏதிலிகள் பேரவை இலங்கையில் இனப்படுகொலை உச்சத்தில் காணப்பட்ட பகுதியில் 2008 -2009 இல் கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவமே நேவி 11 என குறிப்பிடப்படுகின்றது.

கடத்தல் சித்திரவதை தடுத்துவைத்திருத்தல் மிரட்டி பணம் பறித்தல் சதி போன்ற குற்றச்சாட்டுகள் முன்னர் வசந்தகரன்னகொடவுக்கு எதிராக காணப்பட்டன எனினும் 2021இல் தற்போதைய சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணத்தினால் அவை கைவிடப்பட்டன என தமிழ் ஏதிலிகள் பேரவை தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கம் இனப்படுகொலை இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதை நிறுத்திவிட்டு இனப்படுகொலைக்கான சாட்சிகளாக உள்ளவர்களுக்கு உதவவேண்டும் இனப்படுகொலை அரசாங்கத்திடம் நாடு கடத்தப்படலாம் என்ற கடும் அச்சத்தில் உள்ள அகதிகளுக்கு நிரந்தர பாதுகாப்பை வழங்கவேண்டும் என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (ஐ)






# பாக்குநீரிணையை கடக்க தயாராகும் மட்டக்களப்பைச் சேர்ந்த மதுஷிகன்!



மட்டக்களப்பு, ஏப். 28

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி பழைய மாணவரும் ஜனாதிபதி விருது பெற்ற சிரேஷ்ட சாரணருமான தவேந்திரன் மதுஷிகன் மே மாதம் 4ஆம் திகதி பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைக்கவுள்ளார்.

இதற்காக இந்தியாவின் தனுஷ்கோடியிலிருந்து அதிகாலை ஒரு மணிக்கு தனது நீச்சல் பயணத்தை ஆரம்பித்து பாக்கு நீரிணையைக் நீந்தி இலங்கையின் தலைமன்னாரை வந்தடையவுள்ளார்.

இவர் தனது சாதனை நீச்சல் பயணத்தில் 30கிலோ மீற்றர் தூரமுடைய நீரிணையை சுமார் 10 மணித்தியாலங்களில் நீந்திக் கரை சேருவதற்கு எதிர்பார்த்துள்ளார்.

மதுஷிகன் தனது சாதனைக்கான முன்னாயத்தமாக கல்கிஸை கடற்கரையில் 20கிலோ மீற்றர் தூரம் வரை நீந்தியுள்ளார்.

தற்போது 20 வயதான மதுஷிகன், மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் 12 வயதில் தனது நீச்சல் பயிற்சியை ஆரம்பித்து மாகாண மற்றும் திறந்த மட்ட நீச்சல் போட்டிகளில் பங்கேற்று வெற்றியீட்டியுள்ளார்.

இதுவரை நீச்சல் திறமைக்காக 12 பதக்கங்களை வென்றெடுத்துள்ள மதுஷிகன் கல்வி பொதுத் தராதர உயர் தரத்தில் கணிதத்துறையில் தமது பாடசாலைக் கல்வியை கற்றதுடன் இலங்கை சாரணியப் படையில் இணைந்து தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி வந்துள்ளார். (அ)

# மட்டக்களப்பில் இரு மாணவர்களுக்கு சாரணியத்துக்கான ஜனாதிபதி விருது



மட்டக்களப்பு, ஏப். 28

மட்டக்களப்பின் புனித மிக்கேல் கல்லூரி மாணவர்களும் சிரேஷ்ட சாரணர்களுமான தவேந்திரன் மதுஷிகன் மற்றும் அமலநாதன் கௌஷிகன் ஆகிய இரு மாணவர்களுக்கு சாரணியத்துக்கான அதி உயர் விருதான ஜனாதிபதி விருது கிடைத்துள்ளது.

இந்த ஜனாதிபதி விருதுக்கான சின்னம் சூட்டி, இம்மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் பாடசாலை முதல்வர் பிரபாகரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இச்சின்னங்களை மாவட்ட சாரண ஆணையாளர் வி. பிரதீபன் அணிவித்தார்.

இவர்கள் இருவரும் கல்வி பொதுத் தராதர உயர்தரத்தில் கணித துறையில் தமது பாடசாலைக் கல்வியை கற்றனர். பாடசாலையில் தரம் மூன்றில் கல்வி கற்கும்போது இலங்கை சாரணியப் படையில் இணைந்து தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி வந் துள்ளனர். (அ)

# மடத்தடி மீனாட்சி அம்மன் கன்னி அலங்கார உற்சவம்



அக்கரைப்பற்று, ஏப். 28

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் முதலாவது வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் புதன் கிழமை சிறப்பாக ஆரம் பமாகியது.

உற்சவகால பிரதம குரு சிவசிறி சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் ஆலயக் குரு சிவசிறி ச.கோவர்த்தன சர்மா சமுகத்தில் வருஷாபிஷேக கிரியைகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று வியாழக்கிழமை கல்முனை மேற்கு தமிழ் மக்களின் இரண்டாம் நாள் திருவிழா நடைபெற்றது.

இன்று வெள்ளிக்கிழமை நிந்தவூர் அட்டப்பள்ளம் மக்களின் மூன்றாம் நாள் திருவிழா நடைபெறும். நாளை சனிக்கிழமை காரைதீவு மக்களின் நான்காவது நாள் திருவிழா நடைபெறும்.

இவ்வாறு தொடர்ச்சியாக ஒன்பது தினங்கள் பகல் அலங்கார உற்சவ திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் மே மாதம் ஐந்தாம் தேதி சித்ரா பௌர்ணமி அன்று தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது .

30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாற்குட பவனி இடம்பெற ஏற்பாடாகி உள்ளது.

இந்த பத்து நாள் அலங்கார உற்சவ திருவிழாக்காலங்களில் காலை 10 மணிக்கு கும்ப பூசையுடன் ஆரம்பமாகி பகல் ஒரு மணிக்கு அலங்கார உற்சவ பிரதான பூசை, அம்பாளின் வீதியுலா இடம் பெறும். (அ)

# பொலிஸ் அதிகாரிக்கு இலஞ்சம் வழங்க முயன்ற பெண் சிக்கினார்!

மட்டக்களப்பு, ஏப். 28

வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் கைதான மகனை விடுவிப்பதற்காக பொலிஸ் அதிகாரிக்கு இலஞ்சம் வழங்க முட்பட்ட தாய் கைது செய்யப்பட்டுள்ளார் .

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:

கடந்த 21 ஆம் திகதி ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஐயங்கேணி மற்றும் வந்தாறுமூலை பகுதிகளைச் சேர்ந்த இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பு காரணமாக இருவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

ஐயங்கேணிப் பகுதியிலிருந்து தாக்குதலுக்குச் சென்று கைவிட்டு தப்பியோடிய மோட்டார் சைக்கிளை மட்டக்களப்பு - கொழும்பு ரயில் பாதையில் தீயிட்டு கொளுத்தியமை காரணமாக மட்டக்களப்பு -கொழும்பு ரயில் 9 நிமிடம் தாமதித்து சென்றுள்ளது.

இந்த சம்பவங்கள் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எதிரிமான்ன ஆலோசனைக்கு அமைய ஏறாவூர்பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் யோ. விஜயராஜா தலைமையில் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் மோட்டார் சைக்கிளை தீயிட்டு கொளுத்திய சந்தேக நபர்கள் நால்வரும் வாளால் வெட்டிக் காயம் ஏற்படுத்திய மூவரும் அன்றைய தினமே கைது செய்யப்பட்டு ஏறாவூர் நிதீமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர் .

மேலும் வாளால் வெட்டிய சம்பவம் தொடர்பில் நேற்று முன் தினம் 23 வயதான நபர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார் . குறித்த நபரை விடுவிப்பதற்காக அவரது தாயார் 20,000 ரூபா இலஞ்சம் வழங்க முற்பட்டவேளை பொலிஸ் பரிசோதகர் யோ.விஜயராஜாவால் கைது செய்யப்பட்டு ஏறாவூர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# உயர்தொழில்நுட்ப கல்வி நிறுவன ஏற்பாட்டில் மட்டக்களப்பில் பெரும் குருதிக்கொடை நிகழ்வு



மட்டக்களப்பு, ஏப். 28

மட்டக்களப்பு உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாபெரும் குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ்.ஜெயபாலன் தலைமையில் நேற்று முன் தினம் கோவில்குளத்தில் உள்ள கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் ஏற்படுகின்ற இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் "இரத்த தானம் செய்து ஒரு உயிரை காப்பாற்ற ஒன்றிணைவோம்" எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு உயர்தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இரத்த தான முகாமுக்கு மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூகம் அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், கல்லூரியின் மாணவ, மாணவிகள் என பலர் இவ் நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)





# நற்பிட்டிமுனையில் யானைகள் அட்டகாசம்

அக்கரைப்பற்று, ஏப். 28

கல்முனை பிராந்தியத்தில் உள்ள நட்பிட்டிமுனை கிராமத்தில் நேற்று வியாழக்கிழமை அதிகாலையில் யானைகள் புகுந்து அட்டகாசம் செய்தன.

நற்பிட்டிமுனை 1ஆம் ,2ஆம் பிரிவுகளில் உள்ள வீடுகளுக்கு சுமார் பத்து யானைகள் புகுந்து மதில்களை உடைத்தும், கட்டடங்களை உடைத்தும் சேதம் விளைவித்தன. அத்துடன் விதைப்பதற்கு வைத்திருந்த முளை நெல்லையும் உறிஞ்சி குடித்தன. மக்கள் அச்சத்துடன் சத்தமிட்டனர்.

அச்சமயம் ,அங்கிருந்த பலர் பொலிஸாருக்கும், 119 க்கும், வனபரிபாலனத் திணைக்களத்திற்கும் தொடர்பு கொண்டனர். ஆனால் முடியவில்லை.

சுமார் ஒரு மணி நேர அட்டகாசத்தின் பின்னர் யானைகள் பின் வாங்கின.

காலையில் வனபரிபாலனத் துறையினர் வந்து படங்களை எடுத்துச் சேதங்களை பதிவு செய்தனர்.

கல்முனை பொலிஸாரிடம் இது தொடர்பாக நேற்று வியாழக்கிழமை காலை மக்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. (அ)

# சூடானில் இன்னும் அதிகமான மரணங்கள் ஏற்படும் அபாயம்!

## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

கார்ட்டூம், ஏப். 28

**சூடானில் உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என எச்சரிக்கை விடுத்துள்ளது. உலக சுகாதார நிறுவனம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.**


சூடானில் ராணுவத்துக்கும் அதன் எதிர்த்தரப்பான ஆர்.எஸ்.எவ் படையினருக்கும் இடையே சண்டை நீடிப்பதால் சுகாதாரச் சேவைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

நோய்ப்பரவல் அபாயமும் உணவு, குடிதண்ணீர்த் தட்டுப்பாடும் பொதுச் சுகாதாரத்துக்குக் கடுமையான மிரட்டலாய் அமைந்துள்ளன என்று உலக சுகாதார நிறுவனத் தலைவர் சுட்டினார்.

தலைநகர் கார்ட்டூமில் 16 விழுக்காடு மருத்துவ நிலையங்கள் மட்டுமே செயல்படுகின்றன. முறையான முதலுதவி கிடைத்திருந்தால் உயிரிழந்தோரில் கால்வாசிப் பேரைக் காப்பாற்றியிருக்கலாம் என்று நிறுவனம் மதிப்பிட்டுள்ளது.

வீதிகளில் வன்முறை தொடர்வதால் காயமடைந்தவர்களுக்கு உரிய நேரத்தில் மருத்துவ உதவி செய்ய இயலவில்லை. இரண்டு வாரமாக நீடிக்கும் சண்டையில் சுமார் 460 பேர் உயிரிழந்துள்ளனர்.

# சீன- உக்ரைன் தலைவர்கள் தொலைபேசியில் உரையாடல்!





பீஜிங், ஏப். 28

சீன அதிபர் ஜி ஜின்பிங் தன்னுடன் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டதாக, உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையே கடுமையான போர் நடைபெற்று வருகிறது. இதனால் உக்ரைனின் பெரும் பகுதி ரஷ்ய ராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

பல நாடுகள் பலவும் போருக்கு எதிராக கண்டனம் தெரிவித்து வருகின்றன. சீனா எப்போதும் ரஷ்யாவுடனான நெருங்கிய தொடர்பிலிருந்து வருகிறது, தற்போதுகூட சின அதிபர் ரஷ்யாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில் சீன அதிபர் ஜி ஜின்பிங், உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியுடன் தொலைபேசியில் பேசியதாக அந்நாட்டு அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜி ஜின்பிங் உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கியுடன் தொலைபேசியில் அழைப்பு விடுத்தார் என்று வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

அழைப்பின் போது சீன அதிபர் ஜெலென்ஸ்கியிடம் பேச்சுவார்த்தை தான், போரிலிருந்து வெளியேற ஒரே வழி என்று கூறியதாக அந்நாட்டின் ஊடகமான சி.சி.ரி.வி தெரிவித்துள்ளது.

உக்ரைன் மற்றும் ரஷ்யாவுடனான போரில் சீனா அதிகார பூர்வமாக நடுநிலை வகித்தாலும், ரஷ்ய படையெடுப்பை சீன அதிபர் ஒரு போதும் கண்டித்த தில்லை. மேலும் ஜெலென்ஸ்கி, சீனப் பிரதிநிதியான ஜி ஜின்பிங் உடன் பேச்சுக்களுக்குத் தயாராக இருப்பதாக பலமுறை கூறியுள்ளார்.

அதிபர் ஜி ஜின்பிங்குடன் நான் நீண்ட மற்றும் அர்த்தமுள்ள தொலைபேசி உரையாடல் செய்தேன். இந்த அழைப்பும், சீனாவுக்கான உக்ரைனின் தூதர் நியமனமும் நமது இருதரப்பு உறவுகளின் வளர்ச்சிக்கு சக்திவாய்ந்த உத்வேகத்தை அளிக்கும் என்று நான் நம்புகிறேன் என ஜெலென்ஸ்கி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (அ)

# டொனால்ட் ட்ரம்ப் என்னை வல்லுறவுக்குட்படுத்தினார்!

## நீதிமன்றத்தில் பெண் எழுத்தாளர் சாட்சியம்



நியூயோர்க், ஏப். 28

டொனால்ட் ட்ரம்ப் தன்னை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினார் என அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் நீதிமன்றில் வாக்கு மூலம் சாட்சியம் அளித்தார்.

ஈ. ஜீன் கரோல் எனும் இப்பெண், நியூஹோர்க்கின் மன்ஹட்டன் சமஷ்டி நீதிமன்றத்தில் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்புக்கு எதிராக நேற்று முன்தினம் புதன் கிழமை சாட்சியம் அளித்தார்.

1996 ஆம் ஆண்டு, மன்ஹட்டன் நகரிலுள்ள பேர்க்டோர்க் குட்மேன் வர்த்தக நிலையத்தின் ஆடை மாற்றும் அறையில் வைத்து தன்னை டொனால்ட் ட்ரம்ப் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என தற்போது 79 வயதான கரோல், சாட்சியமளித்தார்.

இச்சம்பவத்தினால் தான் அவமானமாக உணர்ந்ததாகவும் காதல் உறவை ஏற்படுத்திக் கொள்ள தன்னால் முடியாமல் இருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

'ட்ரம்ப் என்னை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதால் நான் இங்கு வந்துள்ளேன்' என அவர் கூறினார்.

2017 முதல் 2021 ஆம் ஆண்டு வரை அமெரிக்க ஜனாதிபதியாக பதவி வகித்த டொனால்ட் ட்ரம்ப், 2020 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றார். 79 வயதான அவர் அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளார்.

பெண்களின் உள்ளாடையொன்றை வாங்குவது தொடர்பாக வேடிக்கையாக ஆலோசனை கேட்ட ட்ரம்ப், ஆடை மாற்றும் அறையின் சுவரை நோக்கி தன்னை ட்ரம்ப் தனது உடலினால் தள்ளி அழுத்தியதுடன் தன்னை வல்லுறவுக்குட்படுத்தினார் என நீதிமன்றத்தில் கரோல் கூறினார்.

2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தனது நூல் ஒன்றில், ட்ரம்ப் தன்னை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாக முதன் முதலில் கரோல் முன்வைத்திருந்தார்.

அதையடுத்து தன்னை டொனால்ட் ட்ரம்ப் அவதூறு படுத்தினார் எனவும் ஈ ஜோன் கரோல் குற்றம் சுமத்தியுள்ளார்.

தன் மீதான பாலியல் குற்றச்சாட்டை டொனால்ட் ட்ரம்ப் கடுமையாக மறுத்து வருகிறார். டொனால்ட் ட்ரம்ப் எதிர்கொள்ளும் பல்வேறு வழக்குகளில் ஒன்றாக இது உள்ளது. (அ)

# தென்கொரியாவுடன் அமெரிக்கா அணு ஆயுதம் குறித்து ஒப்பந்தம்!

நியூயோர்க், ஏப். 28

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கும், தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோல்க்கும் இடையில் அணு ஆயுதங்கள் தொடர்பான புதிய ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தென்கொரியாவில், அமெரிக்க அணுசக்தி நீர்மூழ்கி கப்பலை நிலை நிறுத்துவதற்கான திட்டங்களை உள்ளடக்கிய வகையில் இந்த புதிய ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

வடகொரியாவின் அச்சுறுத்தல்களில் இருந்து தென்கொரியாவை பாதுகாப்பதற்கும், அவர்களுக்கு ஆதரவு வழங்குவதற்குமாக அமெரிக்காவின் முயற்சியாக இது கருதப்படுகின்றது.

வொஷிங்டன் ஒப்பந்தம் என அழைக்கப்படும் குறித்த ஒப்பந்தம் இரண்டு நாடுகளினதும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். (அ)

# சூடானுக்கு கடற்படையை அனுப்பி வைத்தது சீனா!

## தனது பிரஜைகளை மீட்பதற்காக



பீஜிங், ஏப். 28

சூடானிலுள்ள சீனப் பிரஜைகளை மீட்பதற்காக தனது கடற்படையை சூடானுக்கு சீனா அனுப்பியுள்ளதாக சீன பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சூடானில் நடைபெறும் மோதல்கள் காரணமாக, பல்வேறு நாடுகள் தமது தூதரக ஊழியர்களையும், பிரஜைகளையும், தரை, வான், கடல் வழியாக வெளியேற்றி வருகின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் அமுலுக்கு வந்த 72 மணித்தியால போர் நிறுத்த அறிவிப்பையடுத்து, மீட்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

எனினும், சில இடங்களில் நேற்றும் மோதல்கள் இடம்பெற்றதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், சூடானிலுள்ள சீனப் பிரஜைகளின் உயிர்களையும் சொத்துக்களையும் பாதுகாப்பதற்காக சீன கடற்படையினர் நேற்று அனுப்பப்பட்டனர் சீன பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் டான் கெபெய் கூறியுள்ளார். (அ)



# சூடானில் உயிரியல் ஆய்வகத்தை கைப்பற்றிய துணை இராணுவம்!

கார்ட்டூம், ஏப். 28

ஆபிரிக்க நாடான சூடானில் இராணுவத்துக்கும், துணை இராணுவ படைக்கும் இடையே உள்நாட்டு போர் நடந்து வருகின்றது. இதனால் ஒட்டுமொத்த நாடும் வன்முறை களமாக மாறியுள்ளது.

இந்த நிலையில், மோதலில் ஈடுபட்டுள்ள ஒருதரப்பு தலைநகர் கார்டூமில் உள்ள தேசிய உயிரியல் ஆய்வகத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பேராபத்து ஏற்படவாய்ப்புள்ளதாக ஐ.நா. கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜெனிவா நகரில் நடைபெற்ற ஐ.நா. கூட்டத்தில் காணொலி காட்சி வாயிலாக பேசிய சூடானுக்கான உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதி நிமா சயீத், 'கார்டூமில் உள்ள உயிரியல் ஆய்வகத்தை சண்டையிடும் ஒரு தரப்பு ஆக்கிரமித்ததில் மிகப்பெரிய உயிரியல் ஆபத்து உள்ளது என தெரிவித்துள்ளார். (அ)



## இங்கிலாந்து வீரர்களுக்கு ரூ. 50 கோடி கொடுக்க முடிவு

புதுடில்லி, ஏப். 28

ஐ. பி. எல். தொடரில் ஜசன் றோய், மொயின் அலி உள்ளிட்ட 6 இங்கிலாந்து அணி வீரர்கள் சிறப்பாக விளையாடி வருவதால், அவர்களுக்கு ஆண்டுக்கு 50 கோடி (இந்திய) ரூபாய் வழங்க ஐபிஎல் அணி நிர்வாகம் முடிவு செய்துதுள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி மற்றும் கவுன்ட்டி அணிகளைவிட அதிக சம்பளம் கொடுக்க ஐ. பி. எல். அணி நிர்வாகங்கள் முடிவு செய்துள்ளன.

இங்கிலாந்து அணி வீரர்களான ஜசன் றோய், மொயின் அலி, சாம் கரன் உள்ளிட்டோர் சிறப்பாக விளையாடி வருவதால் அவர்களுக்கு ஆண்டுக்கு 50 கோடி ரூபாய் வழங்க ஐ. பி. எல். அணிகள் முடிவு செய்துள்ளன. (ஐ)



## குசல் மெண்டிஸ் இரு மைல்கற்கள்!

காலி, ஏப். 28

அயர்லாந்துக்கு எதிரான போட்டியில் இலங்கையின் குசல் மெண்டிஸ் இரு மைல்கற்களை எட்டியுள்ளார்.

தனது 58ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் குசல் மெண்டிஸ் முதல் தடவையாக இரட்டை சதத்தைப் பூர்த்திசெய்தார். இந்தப் போட்டியில் அவர் பெற்ற 245 ஓட்டங்கள் டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் அவரால் பெறப்பட்ட அதிகூடிய ஓட்டமாகும்.

இந்தப் போட்டியில் 11 சிக்ஸர்களை விளாசியதன் மூலம் ஓர் இன்னிங்ஸில் அதிக சிக்ஸர்களை அடித்த இலங்கை வீரர் என்ற சாதனையை நிலைநாட்டினார்.

இதற்கு முன்னர் இலங்கை சார்பாக குமார் சங்கக்கார ரவே ஓர் இன்னிங்ஸில் அதிக சிக்ஸர்களை அடித்திருந்தார். பங்களா தேஷுக்கு எதிராக சட்டேக்ராம் அரங்கில் 2014இல் 319 ஓட்டங்களைக் குவித்த குமார் சங்கக்கார 8 சிக்ஸர்களை அடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## விலகினார் வாஷிங்டன் சுந்தர்!

ஹைதராபாத், ஏப். 28

ஐ. பி. எல். தொடர் தற்போது நடக்கிறது. இதில், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்காக தமிழரான வாஷிங்டன் சுந்தர் விளையாடி வருகிறார்.

இந்த நிலையில், தொடையில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் எஞ்சிய போட்டிகளில் இருந்து விலகியுள்ளார். இந்த தகவலை சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி நிர்வாகம் தன்னுடைய ருவிற்றரில் தெரிவித்துள்ளது.

அந்த அணியின் முக்கிய வீரராக செயல்பட்டு வந்த வாஷிங்டன் சுந்தர், காயம் காரணமாக விலகி யிருப்பது அந்த அணிக்கு பின்னடைவாகப் பார்க்கப் படுகிறது. மேலும், நடப்பு தொடரில் அந்த அணி இரு வெற்றிகளை மட்டும் பெற்று புள்ளிப்பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.(ஐ)

# குசல், நிசான் இரட்டை சதங்கள்; 704 ஓட்டங்கள் குவித்தது இங்கை

காலி, ஏப். 28

நிசான் மதுஷ்க, குசல் மெண்டிஸ் ஆகியோரின் இரட்டை சதங்களும் மத்தியூஸ், திமுத்தின் சதங்களும் கைகொடுக்க இலங்கை அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 704 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இடை நிறுத்தியது இலங்கை அணி.

இரு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடருக்காக அயர்லாந்து அணி இலங்கை வந்துள்ளது. முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அபார வெற்றி பெற்றது. இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் கடந்த திங்கட்கிழமை காலியில் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடியது அயர்லாந்து அணி சகல விக்கெட்களையும் இழந்து 492 ஓட்டங்களை குவித்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 357 ஓட்டங்களை குவித்திருந்த நிலையில் நேற்றுமுன்தினம் மழையால் ஆட்டம் தடைப் பட்டது.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் தொடங்கியது. நிசான் மதுஷ்க 149, குசல் மெண்டிஸ் 83 ஓட்டங்



களுடன் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். இருவரும் சிறப்பான ஆட்டத்தைத் தொடர்ந்தனர். குசல் மெண்டிஸ் சதம் கடந்து அதிரடியை தொடர்ந்தார்.

நிசான் மதுஷ்க நிதானமாக ஆடி இரட்டை சதத்தை தொட்டார். 3 போட்டிகளிலேயே இரட்டை சதத்தை தொட்டுள்ளமை விசேடமாகும். 22 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 205 ஓட்டங்களை குவித்து அவர் ஆட்டமிழந்தார்.

அதிரடியாக ஆடிய குசல் மெண்டிஸுடன் இணைந்த அஞ்சலோ மத்தியூஸ் அவருக்கு துணை நின்றார். குசல் 263 பந்துகளில் 14 பௌண்ட்ரிகள், 9 சிக்ஸர்களுடன் இரட்டை சதத்தை தொட்டார். இது இவரின் முதல் இரட்டை சதமாகும்.

அரைச்சதம் கடந்த மத்தியூஸ் சதத்தை நெருங்குகையில் 245 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த மத்தியூஸ் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

151 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 704 ஓட்டங்களை குவித்த இலங்கை ஆட்டத்தை இடைநிறுத்தியது. மத்தியூஸ் 100, தனஞ்சய டி சில்வா 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

அயர்லாந்தின் பந்துவீச்சில் கிரஹம் ஹூம், அன்டி மைக்பிரைன், கெம்பர் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய அயர்லாந்து அணி 10 ஓட்டங்களுக்கே ஒரு விக்கெட்டை இழந்திருந்தது.

(ஐ)

# கோலியின் படையை வீழ்த்தியது கொல்கத்தா!

பெங்களூர், ஏப். 28

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஐ. பி. எல். தொடரில் நேற்று றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியும் மோதின. பெங்களூரில் நடந்த இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற றோயல் சலஞ்சர்ஸ் அணி பந்துவீச்சை தேர்வு செய்ய, அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைற் ரைடர்ஸ் 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 200 ஓட்டங்கள் குவித்தது.

தொடக்க வீரர் ஜசன் றோய் கடந்த போட்டியை போலவே அதிரடியாக ஆடி 29 பந்துகளில் 4 பௌண்ட்ரி, 5 சிக்ஸர்களுடன் 56 ஓட்டங்கள் விளாசி அணியின் ஓட்டக் குவிப்புக்கு முக்கிய காரணமாக அமைந்தார்.

இதேபோல் கொல்கத்தா அணியின் தலைவர் நிதிஷ் ராணா 48 ஓட்டங்களும், வெங்கடேஷ் ஐயர் 31 ஓட்டங்களும், நாராயண் ஜெகதீசன் 27 ஓட்டங்களும் எடுத்து அணிக்கு கைகொடுத்தனர்.

பெங்களூர் அணி தரப்பில் அதிகபட்சமாக ஹசரங்கா, விஜய குமார் விஷாக் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

இதையடுத்து 201 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பெங்களூர் அணிக்கு தலைவர் பப் டு பிளெசிஸ் அதிரடியாக ஓட்டக்குவிப்பை தொடங்கினார். அவரைக் கட்டுப் படுத்த கொல்கத்தா அணித் தலைவர் நிதிஷ் ராணா சுழற்பந்துவீச்சாளர் சுயாஷ் சர்மாவை அழைத்தார். அணித் தலைவரின் நம்பிக்கையை காப்பாற்றிய சுயாஷ், 3ஆவது ஓவரில் பிளெசிஸை 17 ஓட்டங்களில் ஆட்டமிழக்க செய்தார். தனது அடுத்த ஓவரில் ஷாபஸ் அகமதுவையும் 2 ஓட்டங்களில் வெளியேற்றி பெங்களூர் ரசிகர்களுக்கு அதிர்ச்சி கொடுத்தார்.

வருண் சக்கரவர்த்தி தன் பங்குக்கு மக்ஸ்வெல் விக்கெட்டை வீழ்த்த, பெங்களூர் நிலைகுலைந்தது. விராட் கோலியும், மஹிபால் லோமரோரும் இணைந்து அணியை மீட்டெடுத்தனர். இந்தக் கூட்டணி 60 ஓட்டங்களுக்கு மேல் இணைப்பாட்டம் அமைத்தது. குறிப்பாக விராட் அரைச்சதம் கடந்தார். அப்போது 34 ஓட்டங்கள் எடுத்திருந்த மஹிபால் லோமரோரை வருண் சக்கரவர்த்தி ஆட்டமிழக்க செய்ய, சில நிமிடங்களில் விராட் கோலியும் நடையைக்கட்டினார்.

விராட் கோலி 54 ஓட்டங்கள் எடுத்திருந்த போது ரஸல் பந்தில் பிடியெடுப்பாகி வெளியேறினார். இதன்பின் வெற்றிக்கு அதிகமான ஓட்டங்கள் தேவைப்பட, பின்வரிசை வீரர்கள் பெரிதாக சோபிக்கவில்லை. இதனால், பெங்களூர் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 179 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வி கண்டது.

இதன்மூலம் 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற கொல்கத்தா அணி நடப்பு தொடரில் 3ஆவது வெற்றியை பதிவு செய்தது.

கொல்கத்தா தரப்பில் வருண் சக்கரவர்த்தி 3 விக்கெட்களும் சுயாஷ் சர்மா, ரஸல் தலா இரண்டு விக்கெட்களும் வீழ்த்தினர்.

(ஐ)



# அச்சம் இல்லையென்றால் தேர்தலை உடன் நடத்துக!

## அரசுக்கு அநுரகுமார சவால்



கொழும்பு, ஏப். 28

**"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவரின் சகாக்களும் தேர்தலுக்கு அஞ்சவில்லையெனில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை உடனடியாக நடத்திக் காட்ட வேண்டும்."**

-இவ்வாறு சவால் விடுத்தார் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க.

அவர் மேலு ம் கூறுகையில்-

பயப்படுகின்ற துணிவில்லாத இந்த அரசால் நாடு எப்படி மீண்டெழுப்போகின்றது?

வாக்குரிமை மக்களின் ஜனநாயக உரிமை. அதை எவராலும் தடுக்க முடியாது.

சாக்குப்போக்குக் காரணங்களைச் சொல்லி ஜனாதிபதியும் தேர்தல்கள் ஆணைக்குழுவினரும் சேர்ந்து உள்ளூராட்சிச் சபைத் தேர்தலைத் திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்துள்ளனர். இதற்கு எதிராக அனைவரும் ஓரணியில் நின்று போராட வேண்டும்.

மக்கள் ஆணையை இழந்த இந்த அரசு, ஆட்சியில் தொடர்வது வெட்கக்கேடு. எனவே, முதலில் உள்ளூராட்சி சபைத் தேர்தலும், அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தலும் விரைந்து நடத்தப்பட வேண்டும் - என்றார். (அ)

# சஜித் அணி எம்.பிக்கள் எவரும் அரசுடன் இணையமாட்டார்கள்

## கூறுகிறார் திஸ்ஸ அத்தநாயக்க



கொழும்பு, ஏப். 28

"ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் எவரும் அரசுடன் இணையமாட்டார்கள்" என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

அடுத்த ஆட்சி சஜித் பிரேமதாஸ தலைமையில்தான் மலரப் போகின்றது. அதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கின்றோம். இந்நிலையில், சஜித் பக்கத்திலிருந்து எவரும் அரசு பக்கம் செல்லமாட்டார்கள்.

ஐக்கிய மக்கள் சக்திக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் பொய்யான செய்திகளை அரச தரப்பினர் வெளியிடுகின்றனர். எனினும், எமது மக்கள் விழிப்பாக இருக்கின்றார்கள்.

எந்தத் தேர்தல் நடந்தாலும் மக்கள் ஆணை சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கே கிடைக்கும். அதனால்தான் இந்த அரசு தேர்தலை நடத்தாமல் காலத்தைக் கடத்துகின்றது - என்றார். (அ)

# ஐ.எம்.எவ். அமுலாக்க தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளது சு.க.

கொழும்பு, ஏப். 28

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான ஏற்பாட்டினை அமுல்படுத்துவதற்கான தீர்மானத்துக்கு தமது கட்சி ஆதரவாக வாக்களிக்கும் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

புலத்சிங்கள பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"நல்லாட்சியின்போது சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் இணைந்து செயற்பட்டோம். மேற்படி அமைப்பால் நிபந்தனைகள் முன்வைக்கப்படலாம். அனைத்தையும் நாம் ஏற்க வேண்டும் என்றில்லை. அந்த அமைப்புடன் பேச்சு நடத்தி திருத்தங்களை மேற்கொள்ளலாம்.

எனவே, சர்வதேச நாணய நிதியத்தின் நிதி நாட்டுக்கு அவசியம். அதற்கு தேவையான ஆதரவை எமது கட்சி வழங்கும்."

- என்றும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார். (அ)

# அமெரிக்காவுக்குள் நுழைய கரன்னகொடவுக்குத் தடை!

கொழும்பு, ஏப். 28

இலங்கை கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் ஒப் த பிலீட் வசந்த கரன்னகொட மற்றும் அவரது மனைவி ஆகியோர் அமெரிக்காவுக்குள் பிரவேசிப்பதற்கு தகுதியற்றவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தினால் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

வசந்த கரன்னகொட கடற்படைத் தளபதியாக செயற்பட்ட காலப்பகுதியில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக தெரிவித்து, வசந்த கரன்னகொட மற்றும் அவரது மனைவி ஆகியோர் அமெரிக்காவுக்குள் பிரவேசிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# 'அறகலய' போராட்டங்களின் பின்னணியில் அமெரிக்காவா?

## மறுக்கிறார் அந்நாட்டுத் தூதுவர்

கொழும்பு, ஏப். 28

இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் பின்னணியில் அமெரிக்கா இருந்ததாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மறுத்துள்ளார்.

'ஒன்பது - மறைக்கப்பட்ட கதை' என்ற நூல் வெளியீட்டு விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ 'அரகலய' ஆர்ப்பாட்டத்தின் பின்னணியுடன் அமெரிக்கத் தூதுவரை தொடர்புபடுத்தி அவரை விமர்சித்திருந்தார்.

இந்நிலையில் இதற்கு பதிலளிக்கும் வகையில் செய்துள்ள ருவிட்டர் பதிவிலேயே இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தனது மறுப்பை தெரிவித்துள்ளார்.

அவரது ருவிட்டர் பதிவில், 'புனைகதை' என்று முத்திரை குத்தப்படவேண்டிய புத்தகத்தில் ஒரு எம்.பி ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்தி அப்பட்டமான பொய்களை பரப்பியிருக்கின்றார்.

75 ஆண்டுகளாக அமெரிக்காவும் இலங்கையும் ஜனநாயகம், இறையாண்மை மற்றும் செழிப்புக்கான உறுதிப்பாட்டை பகிர்ந்து கொண்டிருக்கின்றன.

அதேபோன்று தொடர்ந்தும் கூட்டாண்மையுடன் எதிர்காலத்தை நாம் உருவாக்குவோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் கடந்த ஆண்டு இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது ஜனாதிபதி மாளிகைக்குள் படைத்தளபதிகள் மற்றும் ஜனாதிபதி உள்ளிட்டோர் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படவிருந்ததாகவும்,

அந்த சந்தர்ப்பத்தில் முன்னாள் இராணுவத்தளபதி இந்தியாவுக்கு சென்றிருந்தமை சந்தேகத்தை தோற்றுவிப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ள கருத்தை பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

'கொழும்பு பாதுகாப்பு மாநாட்டின் பக்க நிகழ்வாக தேசிய பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டம் கடந்த ஆண்டு ஜூலை 7ஆம் திகதி இந்தியாவில் இடம்பெற்றது.

நாட்டின் அப்போதைய ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனை மற்றும் அனுமதியின் கீழ் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாதுகாப்பு பதவி நிலை தலைமை அதிகாரி, முன்னாள் விமானப்படைத் தளபதி சவேந்திர சில்வா குறித்த மாநாட்டில் பங்குபற்றியிருந்தார்.

இந்நிலையில் நூல் வெளியீட்டு விழாவொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய விமல் வீரவன்ஸ, '2022 மே 9ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்தவர்கள் ஜனாதிபதி மாளிகைக்குள் ஜனாதிபதி மற்றும் படைத்தளபதிகள் மீது தாக்குதல்களை மேற்கொள்ள திட்டமிட்டதாகவும், அந்த சந்தர்ப்பத்தில் சவேந்திர சில்வா இந்தியா சென்றிருந்தமை சந்தேகத்தை ஏற்படுத்தியது.' என குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ள கருத்து அடிப்படையற்றதாகும் சவேந்திர சில்வா கொழும்பு பாதுகாப்பு மாநாட்டில் பங்கு பற்றுவதற்காக கடந்த ஆண்டு ஜூலை இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தமை அப்போதைய ஜனாதிபதியின் ஆலோசனைக்கமையவே என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்-எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமும் நாணய நிதிய நிபந்தனையா?

## நளின் பண்டார சபையில் கேள்வி

கொழும்பு, ஏப். 28

அரசாங்கம் தனது தேவைக்காக பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் போன்ற விதிகளை கொண்டு வருவதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார குற்றம் சாட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை உரையாற்றிய அவர், குறித்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனை என்றே தான் கருதுவதாகவும் குறிப்பிட்டார்.

அரசாங்கம் சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுக்காமல் நாட்டை திவாலாக்கியது என்றும் ஊழல்வாதிகளால் சூழப்பட்டுள்ள அரசாங்கமே தற்போது காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, நாட்டை அதலபாதாளத்துக்கு கொண்டு சென்றவர்கள் ராஜபக்ஷர்களே என்றும் நளின் பண்டார குற்றம் சாட்டினார்.

தற்போதைய புதிய அரசாங்கம் தொழில்முயற்சியாளர்களை வலுப்படுத்தும் சட்டங்களை உருவாக்குவதற்கு பதிலாக இவ்வாறு செயற்படுவது குறித்தும் அவர் அதிருப்தி வெளியிட்டார். (அ)

# இந்திய-இலங்கை படகு சேவையால் இரு நாட்டு மக்களும் பயனடைவர்!

## இந்திய தூதுவரிடம் மல்வத்து மகாநாயக்கர்

கொழும்பு, ஏப். 28

இந்திய - இலங்கை படகு சேவை இரு நாட்டு பொது மக்களுக்கும் பலனளிக்கும் என்று தம்மை சந்தித்த இந்திய தூதுவர் கோபால் பாக்லேயிடம் தெரிவித்துள்ளார் மல்வத்து பீட மகாநாயக்க தேரர்.

நேற்று முன் தினம் தம்மை சந்தித்த இந்திய தூதுவரிடம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான படகுச் சேவைகள் தொடர்பில் கேட்டறிந்த பின்னரே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இந்திய தூதுவர் கோபால் பாக்லே, மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர்கள், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பல நூற்றாண்டுகள் பழமையான உறவை எடுத்துரைத்ததுடன், பல்வேறு நெருக்கடிகளில் இலங்கைக்கு ஆதரவாக இருந்த இந்திய அரசாங்கத்தை பாராட்டினர்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான உறவுக்காக தூதுவர் மல்வத்து மகாநாயக்கருக்கு நன்றி தெரிவித்தார்.

புதுடில்லியில் நடைபெற்ற உலக பௌத்த மாநாட்டின் தொடக்க உரையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பங்களிப்பைப் பாராட்டிய மகாநாயக்கர்கள், மோடியின் பௌத்தத்தின் நெருக்கம் வார்த்தைகளில் மட்டுமல்ல, செயலிலும் தெரிகிறது - என்றும் கூறினர். (ஐ)

## 19பவுண்...

கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றிருந்தது. இது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் நேற்று 23 வயது இளைஞர் ஒருவரைக் கைது செய்தனர். (ஐ-3)

## தையிட்டி...

இராணுவம், பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன், விகாரைக்கு செல்லும் வழியில் பௌத்த கொடிகள் - தோரணங்களாக அமைக்கப்பட்டிருந்தன. அப்பகுதிக்கு செல்வதற்கு செய்தியாளர்களுக்கோ, அப்பகுதி மக்களுக்கோ அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை.

எனினும், தையிட்டி விகாரைக்கு கலசம் வைக்கும் நிகழ்வு முன்னெடுக்கப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

இதனிடையே, தையிட்டில் தனியார் காணியில் அமைக்கப்பட்ட விகாரையே யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட மிக உயரமான விகாரையாகும். இந்த விகாரை முழுமையாக இராணுவத்தினரால் கட்டப்பட்டு வந்தது. அங்கு பௌத்த பிக்கு ஒருவரும் வசித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

வலி. வடக்கு பிரதேசம் இராணுவத்தினரின் உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த சமயத்திலேயே இந்தக் காணிக்குள் புத்தர் சிலை வைக்கப்பட்டு விகாரை அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது. இந்தப் பகுதிகள் சில மாதங்களுக்கு முன்னர் விடுவிக்கப்பட்டபோதே இங்கு விகாரை அமைக்கப்படும் தகவல் வெளிவந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-03)

## விக்கிரகங்கள்...

விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ஆலயத்தில் வழிபாடுகளை நடத்துவதற்கு தடை விதிக்கும் உரிமை அதிகாரிகளுக்கு இல்லை என்று கட்டளை பிறப்பித்ததுடன், தொல்பொருள் திணைக்களத்தின் கருத்துகளை பெற்ற பின்னர் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்வது தொடர்பில் தீர்ப்பளிக்கப்படும் என்று தெரிவித்து, நேற்றைய தினத்துக்கு வழக்கை ஒத்தி வைத்திருந்தது.

இந்த நிலையில், நேற்றைய தினம் மன்றில் முன்னிலையான தொல்பொருள் திணைக்களத்தினர் விக்கிரகங்களை மீள்பிரதிஷ்டை செய்வதற்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்தனர். இதையடுத்தே, விக்கிரகங்களை தொல்லியல் திணைக்களத்தின் மேற்பார்வையில் மீள் பிரதிஷ்டை செய்ய நீதிமன்றம் அனுமதியளித்தது.

இதனிடையே, வெடுக்குநாறிமலையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட விக்கிரகங்கள் மற்றும் பூசை பொருட்களை ஆலய நிர்வாகத் தரப்பிடம் ஒப்படைக்குமாறும் பொலிஸாரிடம் நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும், பூசை வழிபாடுகளுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாமல் இருக்கவும், பாதுகாப்பு நடவடிக்கையை மட்டும் வழங்குமாறும் பொலிஸாருக்கு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது. இந்த வழக்கு தொடர்பான விசாரணை எதிர்வரும் மே 17ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் ஆலய நிர்வாகம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர்.

தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த மார்ச் 26ஆம் இனந்தெரியாதவர்கள் சிவலிங்கம், பிள்ளையார், அம்மன், முருகன் விக்கிரகங்களை உடைத்து எறிந்திருந்தனர். அத்துடன், சிலவற்றை அங்கிருந்து எடுத்தும் சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாட்டை...

வரையில் வரிச் சலுகைகளை வழங்கி, அரச வருமா னத்தை 12 வீதத்தில் இருந்து 8 வீதம் வரையில் குறைத்து, நாட்டை இவ்வாறான நெருக்கடி நிலைக்கு செல்வதற்கான ஆரம்பத்தை முன்னெடுத்தது.

மேலும், இந்த அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் இணங்கிய விடயங்களில் எமக்கு பெரும் பிரச்னைகள் உள்ளன. வருமானத்தை அதிகரிக்க வரிசூத்திரமொன்றை கொண்டு வந்தது. அதில் குறைபாடுகள் உள்ளன. அது தவறானது. அதனை உடனடியாக திருத்த வேண்டும்.

எவ்வாறாயினும், ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் நாட்டுக்கு இல்லாமல்போன - கொள்ளையடித்த டொலர் மற்றும் நிதியை மீளப் பெற்றுக்கொள்வதற்காக அது தொடர்பான சட்ட மூலத்தை கொண்டுவந்து அதிகார சபையொன்றை அமைத்து, இல்லாமல் போன வளங்கள், டொலர் மற்றும் ரூபா யையும் மீளப் பெற்றுக்கொள்ள நட வடிக்கை எடுப்போம்.

அரச நிறுவனங்களுக்கு தனியாக இலாபமீட்ட முடியாது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதே. இதனால் நாங்கள் கலப்பு முறைக்கு செல்ல முடியும். சிங்கப்பூர், மலேசியா போன்ற முறைகளில் செய்ய முடியும். இதனால் புதிய முறையில் செல்வோம். ஆனால், தனியார் மயப்படுத்தல் போர்வையில் இலாபமடையும் அரச நிறுவனங்களை தமது நண்பர்களுக்கு விற்பனை செய்யும் திட்டங்களை தோற்கடிக்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன், அமைச்சுப் பதவிகளை கொடுத்து, ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களை அரசாங்கத்தின் பக்கம் இழுப்பதற்கு முயற்சிக்கப்படுகிறது. ஆனால், ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இருந்து எவரும் அவ்வாறு செல்லப் போவதில்லை. அதேவேளை, அரசாங்கத்தில் உள்ள குழுவொன்றே எங்களின் பக்கத்துக்கு வரவுள்ளனர் என்ற எதிர்வுகூறலையும் கூறுகின்றேன் - என்றார். (ஐ)

## நீதிவான்...

ஆலயம் அமைந்துள்ள சூழலை தொல்பொருள் திணைக் களம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இதைத் தொடர்ந்து அங்கு விகாரை இருந்ததாகக் கூறி கட்டுமானப் பணி களை தொடங்கியது.

இது தொடர்பில், அங்குள்ள ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகம் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தது. அங்கு விகாரை கட்டுவதற்கு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தது. ஆனால், அதை மீறி கட்டுமான நடவடிக்கைகள் இரவு பகலாக தொடர்ந்தது.

இது குறித்து கடந்த மார்ச் மாதம், நீதிமன்ற கட்டளையை மீறி விகாரை கட்டுமானம் நடைபெறுவதாக நீதிமன்றின் கவனத்துக்கு ஆலய நிர்வாகம் முறையீடாகக் கொண்டுவந்தது.

இது தொடர்பான வழக்கு நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, நீதிமன்ற கட்டளையை மீறி கட்டுமானப்பணிகள் எதுவும் நடக்கவில்லை என்று தொல்பொருள் திணைக்களம் மற்றும் அரச சட்டத்தரணிகள் மன்றில் தெரிவித்தனர்.

இதனை ஆலய நிர்வாக தரப்பு சட்டத்தரணிகள் மறுத்தனர். பல மணி நேரம் தொடர்ந்த வாத பிரதிவாதங்களின் முடிவில் நீதிவான் ரி.சரவணராஜா, எதிர்வரும் ஜூலை 04ஆம் திகதி விகாரைப் பகுதிக்கு நேரில் வந்து பார்வையிட்ட பின்னர் கட்டளை பிறப்பிப்பதாக தெரிவித்து வழக்கை அன்றைய தினத்துக்கு ஒத்திவைத்தார். (ஐ)

# மருத்துவருக்கு அச்சுறுத்தல் கைதான மூவருக்கு மறியல்!

புத்தூர் அரசினர் மத்திய மருந்தகத்திற்குள் புகுந்து தாக்குதல் நடத்தியதுடன் மருத்துவருக்கும் கொலை அச்சுறுத்தல் விடுத்த குற்றத்தில் கைது செய்யப்பட்ட மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பங்குனி திங்கள் தினமான கடந்த 10ம் திகதி புத்தூர் சந்தியில் தண்ணீர் பந்தல் அமைத்த இளைஞர்கள் ஒலி பெருக்கியை அதிக சத்தத்தில் ஒலிக்க விட்டுள்ளனர். சத்தத்தை குறைக்குமாறு அவர் மருத்துவர் அங்கு சென்று கூறியிருந்தார். இதன் பின்னர், மருத்துவ மனைக்குள் நுழைந்த சிலர் அங்கு தாக்குதல் நடத்தியதுடன், மருத்துவருக்கு அச்சுறுத்தலும் விடுத்துச் சென்றனர். இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால், மருத்துவமனையின் சேவைகள் இடைநிறுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்தே, சந்தேகநபர்கள் மூவர் நேற்று கைது செய்யப்பட்டனர். (ஐ-03)

## இனப்பிரச்னை...

சர்வதேச நாணய நிதியத்தை கடுமையாக விமர்சித்தவர்கள் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தில் நாணய நிதியத்தை வரவேற்கிறார்கள். கடந்த செப்ரெம்பரில் கைச்சாத்திடப்பட்ட ஊழியர் மட்ட ஒப்பந்த அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்து, அது தொடர்பில் விவாதத்தை நடத்துமாறு பலமுறை வலியுறுத்தினோம்.

ஊழியர் மட்ட ஒப்பந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் முதல் தவணை நிதி தொகையை பெற்றுக் கொண்டவுடன் ஒப்பந்தம் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, விவாதிக்கப்படுகிறது. நாணய நிதிய விவகாரத்தில் பாராளுமன்றம் ஒருமித்து செயல்படுகிறது என்பதை பிரதான நிலை கடன் வழங்குநர்களுக்கு காண்பிப்பதற்கு இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை ஊகிக்க முடிகிறது.

தற்போதைய பொருளாதார பாதிப்பு குறுகிய காலத்தை மாத்திரம் வரையறுத்ததல்ல. நாட்டில் இனப்பிரச்னை தோற்றம்பெற்றதைத் தொடர்ந்து பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்தது. தமிழ் மக்களை அழிப்பதற்காக மொத்த தேசிய வருமானமும் வெளிநாட்டு அரச முறை கடன்களும் முழுமையாக பயன்படுத்தப்பட்டன. யுத்த சூழல் தமிழர்களை மாத்திரமல்ல பொருளாதாரத்தையும் அழித்தது. அதற்கு சிங்கள பெரும்பான்மை அரசாங்கம் தலைமைத்துவம் வழங்கியது.

பொருளாதார பாதிப்புக்கு சர்வதேச நாணய நிதியம் என்பது குறுகிய கால ஒரு தீர்வாகும். அது நிலை பேறான தன்மையை உருவாக்காது. இலங்கை புதிய பரிமாணத்தை நோக்கி பயணிக்க வேண்டுமாயின் நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட சூழலில் இனப்பிரச்னைக்கு தீர்வு காண சர்வக்கட்சி கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் பெறுபேறு எவ்வாறு அமையும் என்பதை ஆரம்பத்திலேயே குறிப்பிட்டோம். அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை குறுகிய காலத்துக்குள் நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த காலங்களில் குறிப்பிட்டார். அது வெறும் வழமையான வாக்குறுதியாக அமைந்தது.

30 வருடகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் அரச நிறுவனங்கள் ஊடாக பறிக்கப்படுகின்றன. தொல்பொருள் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்கள் தமிழர்களுக்கு எதிராகவே செயல்படுகின்றன. தமிழரின் புராதன சின்னங்கள் மற்றும் உரிமைகள் அழிக்கப்படுகின்றன. அதற்கு நீதிமன்றம் தடை விதிக்கும்போது அதனை ஒரு தரப்பினர் மதிக்காமல் தன்னிச்சையாக செயல்படுகிறார்கள். இதற்கு பொலிஸாரும் ஆதரவாக செயல்படுகிறார்கள். தமிழர்களுக்கு எதிரான செயல்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் - என்றார். (ஐ)

## இந்திய...

இவரின் வருகையின்போது, பிரதானமாக பிராந்திய விமானப் படைகளுக்கிடையில் ஒத்துழைப்பை மேம்படுத்தல், கூட்டு பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்ப அனுப வப் பகிர்வுகள், சமுத்திர கண்காணிப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவை தொடர் பில் கலந்துரையாடப்படவுள்ளன.

6 நாட்கள் இலங்கையில் தங்கியிருக்கும் இந்திய விமானப்படை தளபதி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரத்ன உள்ளிட் டோரையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார். (ஐ)

## நெடுந்தீவை...

தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந் தார். இந்நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று மாலை உயிரிழந்தார்.

வெளிநாட்டிலிருந்து வந்து தங்கியிருந்த அவர்களிடமிருந்த நகைகளை கொள்ளையிடுவதற்காகவே இந்தப் படுகொலைகள் நடத்தப்பட்டிருந்தன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் புங்குடுதீவில் மறைந்திருந்த நிலையில் சனிக்கிழமை இரவே கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 26 பவுண் நகைகள், பணம், கைபேசி என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருந்தன. (ஐ)

## ஊழல்...

ஒரு வெளிநாட்டு அரசாங்கம் அல்லது ஓர் அரசு அல்லது ஒரு வெளி நாட்டு சட்ட அமுலாக்க நிறுவனத்தால் நிறுவப்பட்ட ஒரு சர்வதேச அமைப்பு அல்லது நபர்களின் அமைப்புடன் ஒப்பந்தங்கள் அல்லது ஏற்பாடுகளை மேற்கொள்ள ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சட்டமூலத்தின்படி குற்றம் இழைத்ததாக நம்பும் எந்தவொரு நபரையும் கைது செய்து சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்தின் கீழ் அரசமைப்பு சபையின் பரிந்துரையின் பேரில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படவுள்ளனர்.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள் உட்பட அரச அதிகாரிகள் மற்றும் அரசமைப்பு சபையின் உறுப்பினர்கள்கூட அவர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் அவர்களின் மனைவி மற்றும் பிள்ளைகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை பிரகடனப்படுத்துவதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் சில விதிகள் மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகள், தரநிலைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதே புதிய சட்டத்தின் நோக்கம் என்று அரசாங்கம் கூறியுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# அமெரிக்காவின் செயல் குறித்து அலட்டிக்கொள்ள விரும்பவில்லை

## கூறுகின்றார் வசந்த கரன்னகொட



**கொழும்பு, ஏப். 28**

**அமெரிக்காவின் கறுப்புப் பட்டியலில் எனது பெயரும் எனது மனைவியின் பெயரும் இணைக்கப்பட்டமை தொடர்பில் நான் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை" - என்று வடமேல் மாகாண ஆளுநரும் முன்னாள் கடற்படைத் தளபதியுமான வசந்த கரன்னகொட தெரிவித்தார்.**

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில், வசந்த கரன்னகொட மீதான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில், அவரோ அல்லது அவரது மனைவியோ அமெரிக்காவுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று அமெரிக்க இராஜாங்க செயலர் அன்டனி பிளின்கன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வடமேல் மாகாண ஆளுநரிடம் ஊடகங்கள் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

”என் மீது எந்தவிதமான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்படவில்லை. இந்நிலையில், அமெரிக்காவின் கறுப்புப்பட்டியலில் எனது பெயரும் எனது மனைவியின் பெயரும் இணைக்கப்பட்டமை தொடர்பில் நான் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை" - என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# சபையில் மன்னிப்பு கோரினார் அலி சப்ரி

*கொழும்பு, ஏப். 28*

பாராளுமன்றத்துக்குள் பொருத்தமில்லாத வார்த்தைகளை பயன்படுத்தியிருந்தால் அவற்றை மீளப்பெறுவதுடன், அதற்காக மன்னிப்பும் கேட்டுக் கொள்வதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமைப் பிரச்னையின்போதே, வெளிவிவகார அமைச்சர் மன்னிப்பு கோரினார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இரா. சாணக்கியனுக்கும் அலி சப்ரிக்கும் இடையில் வார்த்தை மோதல் ஏற்பட்டபோது, இனவாத அரசியல் செய்பவர் என்ற சாரப்பட சாணக்கியனை, அலி சப்ரி திட்டினார்.

நேற்று, சிறப்புரிமைப் பிரச்னையொன்றை எழுப்பிய சாணக்கியன், பாராளுமன்றத்துக்கு பொருத்தமில்லாத வார்த்தைகளால் அமைச்சர் அலி சப்ரி தன்னைச் சுட்டிக்காட்டியதாக குறிப்பிட்டார்.

அத்துடன், 2015ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷ தரப்பில் தேர்தலில் தான் போட்டியிட்டது இரகசியமல்லவென்றும், தற்போதைய தேர்தலில் தமது கட்சி சார்பில் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்றவர் தானேயென்றும், தேசியப்பட்டியலில் பாராளுமன்றம் வந்த அலி சப்ரி, மக்களால் தெரிவு செய்யப்பட்ட தனக்குரிய கண்ணியத்தை வழங்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

அத்துடன், தாம் இலங்கையர் சார்பில் அனைத்து பிரச்னைகளுக்கும் குரல் கொடுப்பதாகவும், அலி சப்ரி 20ஆவது திருத்துத்துக்கு ஆதரவளித்ததாகவும், தான் ஜனாஸா எரிப்புக்கு எதிராக குரல் கொடுத்ததாகவும் கூறினார்.

இதன்போது, எழுந்து கருத்து தெரிவித்த அமைச்சர் அலி சப்ரி, 2015 ஆம் ஆண்டு மகிந்த தரப்பில் தேர்தல் கேட்டார். 3000 வாக்குகள்தான் கிடைத்தன. அடுத்த தேர்தலில் இனவாதம் பேசி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடுகிறார். இது என்ன அரசியல்?

கோட்டாபயவின் அமைச்சரவையில் ஜனாஸா எரிப்புக்கு எதிராக 5 முறை குரல் கொடுத்தேன். எதிர்முகாமிலிருந்தாலும் வாசுதேவ நாணயக்கார அதற்கு சாட்சி.

மக்கள் பிரச்னையை பேசவேண்டிய இடத்தில் பேச வேண்டும். அதைப் பகிரங்கமாக பேசி இனமுறுகலை ஏற்படுத்தவில்லை. சாணக்கியனை போல பார்வையாளர்களுக்காக பேசவில்லை.

நான் கோட்டாபயவை ஆதரித்தது சரியான முடிவு. அவரே நாட்டில் பயங்கரவாதத்தை அழித்தவர்.

அத்துடன், பாராளுமன்றத்தின் கண்ணியத்துக்கு பொருத்தமில்லாத வார்த்தைகளைப் பயன்படுத்தியிருந்தால் அதை திரும்பப் பெற்று, மன்னிப்பு கோருகிறேன்-என்றார்.

இதன்போது, எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும், அலி சப்ரி தெரிவித்த வார்த்தையை கண்டித்தார். அந்த வார்த்தை ஹன்சாட்டில் பதிவாகியுள்ளதை சுட்டிக் காட்டினார்.

அந்த வார்தையை ஹன்சாட்டிலிருந்து அகற்றுவதாக சபாநாயகர் தெரிவித்தார்.

பின்னர் உரையாற்றிய சாணக்கியன், அலி சப்ரியின் முடிவை வரவேற்றதுடன், மகிந்த அணியுடன் தேர்தலில் போட்டியிட்டதை விளக்க முற்பட்டார்.

அந்த தேர்தலில் மகிந்த தரப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் எந்த ஆசனத்தையும் வெல்லவில்லையென்றும், மகிந்த அணியின் அரசியல் எமது மக்களுக்கு பொருத்தமில்லையென்பதால் அதிலிருந்து வெளியேறியதாகவும் குறிப்பிட்டார்.

இந்த பிரச்னையை இத்துடன் முடித்துக் கொள்ளலாம் என சபாநாயகர் அறிவித்து, சர்ச்சை முடிவுக்கு வந்தது. (அ)

# கரன்னகொடவுக்கு தடை; பேர்ள் அமைப்பு வரவேற்பு

*கொழும்பு, ஏப். 28*

இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை இலங்கையில் சமத்துவம் மற்றும் நிவாரணத்திற்கான மக்கள் அமைப்பு (பேர்ள்) வரவேற்றுள்ளது.

வசந்த கரன்னகொட அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு பிரிவு (7031) சியின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தடையை வரவேற்கின்றோம் என பேர்ள் தெரிவித்துள்ளது.

இலங்கையின் வடமேல் மாகாணத்தின் ஆளுநராக தற்போது பணியாற்றும் வசந்த கரன்னகொட இலங்கையில் ஆயுதமோதல் இடம்பெற்ற காலப்பகுதியில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என நம்பகதன்மை மிக்க குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என பேர்ள் தெரிவித்துள்ளது. இலங்கையில் இடம்பெற்ற குற்றங்களுக்கு பொறுப்பு கூறப்படுவதையும் நீதி நிலைநாட்டப்படுவதையும் நோக்கிய முக்கியமான நடவடிக்கை இந்த தடை என பேர்ள் அமைப்பு கூறியுள்ளது. (அ)

# கடும் வெப்பமான காலநிலை மே 20இற்கு பின்னர் குறையும்

*கொழும்பு, ஏப். 28*

எதிர்வரும் மே மாதம் 20ஆம் திகதிக்கு பின்னர், வெப்பமான காலநிலை குறைவடையக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டில் தற்போது மழை கிடைக்கப்பெறும் நிலையில், வெப்பம் குறைவடைவதற்கான சாத்தியங்கள் தென்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அத்துல கருணாநாயக்க தெரிவித்தார்.

ஆரம்பத்தில் காணப்பட்ட வெப்பநிலை தற்போது சிறியளவில் குறைவடைந்துள்ளது.எனினும், இன்னும் வெப்பநிலை நீங்கவில்லை.

மழைவீழ்ச்சி தொடர்ந்தும் அதிகரிக்குமானால், வெப்பநிலை அடுத்த மாதம் 20ஆம் திகதிக்கு பின்னர் குறைவடையும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார். (அ)

# தீவிரமடைகிறது கோவிட் தொற்று

*கொழும்பு, ஏப். 28*

இலங்கையில் மீண்டும்கோவிட்தொற்றுக்குள்ளான 07 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அரசாங்க தகவல் திணைக்களம் இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் புதிதாக பதிவாகிய நோயாளிகள் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, இலங்கையில் இதுவரை பதிவாகியுள்ள மொத்த கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 6,72,150 ஆகும்.

இதேவேளை, இலங்கையில் கடந்த 25ஆம் திகதி புதிதாக நான்கு கோவிட் நோயாளர்கள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இரகசிய சந்திப்புகளில் ஈடுபடும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள்!

*கொழும்பு, ஏப். 28*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் இணைவதற்கு முடிவெடுத்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த மூன்று வாரங்களில் மாத்திரம் கொழும்பில் 5 தடவைகள் இரகசிய சந்திப்புக்களை நடத்தியுள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசாங்கத்துடன் இணைவது தொடர்பில் பல விடயங்கள் இந்தச் சந்திப்புக்களின்போது பேசப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இறுதியாக நடைபெற்ற சந்திப்பில் அனைவரும் ஒரே தடவையில் குழுவாகச் சென்று அரசாங்கத்துடன் இணைவதா அல்லது கட்டம் கட்டமாக இணைவதா என்பது தொடர்பில் முக்கியமாகப் பேசப்பட்டுள்ளது.

சகலரும் ஒரே தடவையில் அரசாங்கத்துடன் இணைந்தால் ஐக்கிய மக்கள் சக்தியில் சஜித் பிரேமதாஸ மாத்திரமே மிஞ்சுவார் என்று இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட சிலர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கறுப்பு பட்டியலில் கரன்னகொட; அமெரிக்காவுக்கு அரசு கண்டனம்

*கொழும்பு, ஏப். 28*

முன்னாள் கடற்படைத் தளபதியும், தற்போதைய வட மேல் மாகாண ஆளுநருமான அட்மிரல் வசந்த கரன்னகொடவை கறுப்புப் பட்டியலில் சேர்த்த அமெரிக்காவின் நடவடிக்கைக்கு இலங்கை அரசாங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி நேற்று அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிடம் இந்த முடிவு தொடர்பான கடுமையான கவலைகளை தெரிவித்தார்.

உரிய நடைமுறையைப் பின்பற்றாமல் அமெரிக்காவின் இத்தகைய ஒருதலைப்பட்ச நடவடிக்கையானது தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை நிவர்த்தி செய்வதில் இலங்கை எடுத்துள்ள முழுமையான அணுகுமுறைக்கு எதிரானது என்று இலங்கை அரசாங்கம் கூறுகிறது.

நாட்டின் ஜனநாயக ஆட்சி மற்றும் நல்லிணக்கக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள உறுதியான முன்னேற்றத்தின் பின்னணியில் இந்த அறிவிப்பு வெளிவருவது துரதிர்ஷ்டவச மானது.

இந்த சவால்கள் இருந்தபோதிலும், நல்லிணக்கம், பொருளாதார மீட்சி மற்றும் சமூக - பொருளாதார மேம்பாடு ஆகியவற்றை அடைவதற்கான அதன் தொடர்ச்சியான முயற்சிகளை இலங்கை அரசாங்கம் தொடரும் என்று அலி சப்ரி குறிப்பிட்டார்.

கரன்னகொட மற்றும் அவரது குடும்பத்தினர் அமெரிக்காவுக்குள் நுழைய நேற்று தடை விதிக்கப்பட்டது.

கரன்னகொட, கடற்படைத் தளபதியாக இருந்த காலத்தில், மனித உரிமைகள் கடுமையாக மீறப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், வெளிநாட்டு நடவடிக்கைகள் சட்டம் 2023 இன் பிரிவு 7031(சி) இன் படி இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.